JANAVINODINI.

ஜநவிநோதிநி.

இல. 6, 7.] { ஜூன்மீ / ஜூலைமீ } 1878. [புஸ்த. IX.

CONTENTS.

Mysore—Royal Procession	125
Avarice & Luxury...............	127
Baroda	130
Self-Help	137
Old Deccan Days	139
Predominent Delusions	151
Shut the Door	156
Dialogue on Parrots	158
The Child's Corner	169
News	174

அட்டவணை.

மைசூர்—மகாராஜா மணக்கோலம்.	125
பொருளாசையும்பெரும்போகமும் பாங்கரான கதை	127
பரோதாநகரம்	130
தன்முயற்சியுடைமை	137
தக்காணத்துப் பூர்வகதை	139
பிரபலஜாலங்கள்	151
கதவுசாத்து	156
கிளியைக்குறித்த சம்பாஷணை ...	158
சிறுவர்க்கான கதை (10)	169
சமாசாரம்	174

MADRAS:

Published by the

MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY,

AND SOLD AT THEIR DEPOSITORY, OLD COLLEGE.

NOTICE.

☞ A new series of interesting Tales from *"Old Deccan Days"* hitherto unknown to the Tamil country is now appearing in Janavinodini.

Also

A "CHILD'S CORNER"

HAS BEEN OPENED

Giving a new tale each month written expressly for Little Folks.

☞ We shall be thankful if our Readers will shew a few Numbers of *Janavinodini* to their relatives and friends in the country. We are anxious to have a larger circulation in the Tamil Districts.

இதுவரையில் நமது நாட்டில் வழங்காத

தக்காணத்துப் பூர்வகதை

என்னும்

விநோதமான புதிய கதைகள்

இப்பத்திரிகையின்

பிரதிமாசச் சஞ்சிகையில் சிற்சிலவாய்ப்

பிரசுரஞ்செய்யலாகும்.

இப்படியே

சிறுவர்க்கான கதை

என்று

சில நூதன கதைகள்

மாதம் ஒவ்வொன்றாகப் பிரசுரமாகிவருகின்றன.

☞ இந்த ஜநவிநோதிநியை வாசிக்கும் நாட்டுக்கையொப்பக்காரர்கள் தங்கள் பந்துமித்திரர்களுக்கும் சில ஸஞ்சிகைகளைக் காட்டிப் படிக்கச்செய்யும்படி வேண்டுகிறோம். நாட்டுக்கையொப்பக்காரர் அதிகரிப்பது இந்தப் பத்திரிகையின் பிரயோஜனமாக இருக்கும்.

ROYAL PROCESSION IN MYSORE DURING THE MAHARAJA'S MARRIAGE.

மைசூர் மகாராஜாவின் மணக்கோலம்.

ஜநவிநோதிநி.

இல. 6, 7.] {ஜூன்மீ ஜூலைமீ} 1878. [புஸ்த. IX.

மைசூர்

மகாராஜாவின் மணக்கோலம்.

சென்ற மேமீ த்துச் சஞ்சிகையில் மைசூர் மகாராஜாவாகிய சியாமராஜேந்திர உடையருக்கு நடந்த விவாஹத்தின் அதிசயங்களைத் தொகுத்துச்சொன்னதுமன்றி, அந்த மகாராஜாவின் வடிவழகையும் முழுப்படமாய்ச் சேர்த்தனுப்பினோமே. அந்தக் கலியாணமகோற்சவத்தில் நடந்த பாணவித்தைமுதலிய ஒவ்வொரு காட்சியும் பார்க்கப்பார்க்கப் புதுமையாய் அனைவரையும் பிரமிக்கச்செய்ததாயினும், விவாஹம்நடந்தவாரத்தில் மகாராஜா, ரதகஜதுரகபதாதியாகிய நால்வகைச்சேனைகளும், அளவற்ற பரிஜனங்களும், அரண்மனை அதிகாரிகளும் புடைசூழ்ந்துவர, சத்திரம் சாமரம் சுருட்டி மகரதோரணம் முதலான பலவித ராஜசின்னங்களோடும் யானைமேல் பொன்மயமான அம்பாரியிலேறி பவனிவந்த வைபவம் மிகவும் அற்புதமானது. அவ்வதிசயத்தை நேரய்ப் பார்த்தவர்களெல்லாம் நாம் கண்படைத்தது இன்றுதான் சபலமாயிற்றென்று சொல்லிச் சந்தோஷித்தார்கள். இப்பத்திரிகையைப் படிப்பவர்க்கும் மற்றவர்க்கும் ஒரு பெரும்பரிசாயிருக்குமென்றெண்ணி அதிசயமான அவ்வூர்கோலக்காட்சிப்படத்தை இச்சஞ்சிகையுடன் சேர்த்திருக்கிறோம்.

இப்படி அனைவரும் கண்டு களிக்கக் கோலாகலமாய் மைசூர் மகாராஜாவுக்கு நடந்த மணக்கோலச்சிறப்பினும் வேறொரு பெருங்காரியம் நடக்கப்போகிறது. சீக்கிரத்திலேயே தக்கவயதுவந்து அவர் மகாராஜபட்டாபிஷேக மகோற்சவங்கொண்டாடி தருமராஜ்யமென்று நாட்டார் புகழ்ந்துபோற்றும்படி மிகப் பெருமையாய் நீதிமுறைதவறாது அரசுசெலுத்தக்கண்டு ஆனந்திக்கவேண்டுமென்று அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறார்கள். இன்னும் இரண்டுவருஷத்தில் அவர்க்கு அரசாளத்தக்க வயதுவரப்போகிறது. பத்துவருஷங்களுக்குமுன்னே இந்த சியாமராஜேந்திர உடையாரைச் சிங்காசனமேற்றியபோது கவர்னர் ஜனரலவர்கள்

ராஜ்யாதிகாரத்தை இவர்வசத்தில் ஒப்புவிப்பதைப்பற்றி ஒரு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.—அதாவது:

"கிருஷ்ணராஜ உடையாருடைய ஸ்வீகாரபுத்திரராயும், இப்போது வாலிபராயுமிருக்கின்ற சியாமராஜேந்திர உடையாரே இனி மைசூர் ராஜ்யத்தை ஆள்வதற்கு உரியவரென்று அங்கீகரிக்கப்பட்டிருக்கிறார். அவர்க்கு வாலிபப்பருவங்கடந்து அரசாளத்தக்க வயதுவருமளவும் அவருடைய ராஜ்யமானது, அவர் பெயராலேயே இதுவரையில் அனுசரித்துவந்த ஏற்பாட்டின்படி, அங்கிலேய துரைத்தனத்தாரால் பரிபாலிக்கப்படும். இந்த யுவராஜாவுக்குத் தக்கவயதும் வந்து, அதாவது பதினெட்டுவயதாகி, சீராய் அரசாளத்தக்க திறமையும் அவரிடத்தில் நன்றாய் அமைந்திருப்பதாகத் தெரிந்தால், அப்போது சமயோசிதமான சில நிபந்தனைகள் ஏற்படுத்தி அந்த ராஜ்யபாரம் அவர் ஆதீனத்தில் ஒப்புவிக்கப்படும்" என்று அக்காலத்தில் பிரசித்தஞ்செய்யப்பட்டிருக்கிறது.

இப்போது சியாமராஜேந்திர உடையார், அற்பகுணங்கள் ஒன்றும் உண்டாகாமல், தைரியம், சவுரியம், ஔதாரியம், அறிவு, விவேகம்முதலான மகாகுணங்களெல்லாம் நன்றாய் அமையும்படி கல்விகேள்வி, தேசயாத்திரை முதலியவைகளிலும், தேகவலிமையும் மனவெழுச்சியும் உண்டாவதற்காகத் தமக்குச் சமவயதான ராஜபந்துப் பிள்ளைகளோடு ஒருவரையொருவர் யார் அதிசயிக்கிறார்களோவென்று போட்டிபோட்டுக் குதிரை சவாரிசெய்தல் முதலான உற்சாக விளையாட்டுகளிலும் பயின்றுவருகிறார். மேலும் இதுவரையில் இச்சென்னை ராஜதானியில் அங்கிலேயபாஷா நிபுணராயிருந்த மேஸ்தர் போர்ட்டர் துரையவர்கள் அம்மகாராஜாவுக்கு வித்தியாப்பியாசஞ்செய்விக்க மைசூருக்குச் சிலநாளைக்குமுன் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டிருக்கிறார். அரமனைக்காரியங்களில், மிக்கவிவேகமும் வித்தியாசம்பத்துமுடைய, ரங்காசாரியர் என்னும் முக்கியாதிகாரி வேண்டியபடி புத்திமதிகள் போதித்துவருகிறார். ஆதலால் அவ்விளவரசர் வெகுசீக்கிரத்திலேயே விசேஷசாமர்த்தியமுடையவராவரென்பதற்குச் சந்தேகமில்லை. போர்ட்டர் துரையவர்கள் இச்சென்னை ராஜதானியை விட்டுப்போனது இவ்விடத்திற்குப் பெருங்குறையாயினும், மைசூர் மகாராஜா விருத்தியடைகிறாரென்பதைக் கண்டு நாம் களிப்படையக்கடவோம். இவ்விளவரசர் இத்தனை சிறப்பாய்க் கல்விகற்பிக்கப்பட்டுவருவதைப்பார்த்தால், தம் அரசாட்சியைத் தாம் கைக்கொள்ளுகிறகாலத்தில், இதுவரையில் ஒரு இளவரசரும் பெற்றிராத வல்லமைகளைப்பெற்று, துரைத்தனச்சீர்மையால் தமது நாடெங்கும் செழித்து சகல சம்பத்தும் சம்பூர்ணமாயிருக்கவும் காணும்படியான பாக்கியமுடையவராயிருக்கிறாரென்று தோன்றுகிறது.

ஒரு தாழ்ந்த நிலையிலிருந்து விருத்தியடைந்து உயர்ந்த அதிகாரியாகிக் கடைசியில் கூர்ச்சரநாட்டுக்கெல்லாம் சுதந்திராதிகாரியாகி, ஒருகாலத்தில் இத்தேசத்திலிருந்த பிரபலமான பிரபுக்களுள் தாமும் ஒருவராகியிருந்தார்கள். அந்த வமிசத்தில் கடைசியான மல்லார்ராவு என்பவர் இரண்டுவருஷத்திற்குமுன்னே சிங்காசனத்தினின்றும் நீக்கப்பட்டு இப்போது இச்சென்னையில் டவிட்டன் மாளிகையில் குற்றவாளியாய்க் காலங்கழித்துக்கொண்டிருக்கிறார். அதிருக்கட்டும், இப்போது கைகோவார் ராஜ்யத்தின் சரித்திரத்தைச் சொல்வதிற் பயனென்ன? அங்கே நான் இருக்கையில் கண்டதும் கேட்டதுமான அதிசயச்செய்திகளைச் சொல்லுகிறேன் கேளுங்கள்: அந்நகரத்திற்கு இரண்டுமைல் தூரத்தில் இங்கிலீஷ்காரருடைய பாசறை பாளயமிறங்குமிடம் ஒன்றுண்டு. அங்கே அங்கிலேயருடைய பட்டாளம் ஒன்று தங்கியிருக்கின்றது. அந்தப் பட்டாளத்தின் தலைவர்களும் அங்கே வாசமாயிருக்கிறார்கள். அத்தேசத்தில் அது மிகவும் சவுக்கியமானவிடமாய்க் காண்கிறது. அது காலவளவிலே ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களுக்கெல்லாம் விரும்பத்தக்க வாஸஸ்தானமாகுமென்று தோன்றுகிறது. அதன் சமீபத்தில் சிங்காரத்தோட்டமொன்று ஏற்பாடாகி வருகின்றது. ராஜாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட ஆஸ்திரியாதேசத்து இஞ்சினீர் ஒருவர் தலைவராயிருந்து அதை விசாரித்துவருகிறார். அத்தோட்டத்து மத்தியில் நேர்த்தியான இரண்டடுக்கு மாளிகையொன்று கட்டப்படுகின்றது. அது வெகுசீக்கிரத்திலேயே முடிவுபெறும். அதன் மச்சுகளெங்கும் வெகு அழகாய்ச் சித்திரவேலை செய்யப்பட்டிருக்கின்றது. அத்தோட்டமெங்கும் பலவிதமான தழைந்தசெடிகளும், அழகிய பூஞ்செடிகளும் பலவிருக்ஷங்களும் வைத்துப் பயிராக்கப்படுகின்றன. அதைப் பார்க்கையில் உடனே இச்சென்னையிலும் பெங்களூரிலும் உள்ள தோட்டங்களுள் மிகவும் அழகான ஒன்று நினைப்பில் வருகின்றது. அந்தத் தோட்டம் இன்னும் கொஞ்சகாலத்தில் ஜனங்கள் வந்து விநோதமாய்க்கூட மிகவும் ஏற்றவிடமாகுமென்று உறுதியாய்த் தோன்றுகின்றது. அந்தத் தோட்டம் நன்றாய் முடிந்தபிறகு அது ஐரோப்பியர்களுக்கும், உயர்ந்த அந்தஸ்திலிருக்கின்ற சுதேசிகளுக்கும் பெரும்பேறாயிருக்கும். இப்போது வேலை செய்து அலுத்துப்போனவர்களுக்கு இளைப்பாறுகிறவிடமாய் வாத்தியஸ்தானமொன்றிருக்கின்றது. அங்கே ஒரு வாரத்தில் மூன்று நான்குதரம் ராஜாவின் பட்டாளத்து கீதவாத்தியக்காரர் வந்து வாத்தியம் வாசிக்கிறார்கள். அந்த வாத்தியஸ்தானம் முன் ஒருகால் குதிரைப்பந்தயம் விடுமிடமாயிருந்த ஒரு வெளியிலே கட்டப்பட்டிருக்கின்றது.

அந்நகரத்திற்கும் அதனருகிலுள்ள இங்கிலீஷ்பாசறைக்கும் பாதையொன்று சிறப்பாய்ச் செப்பனிட்டிருக்கின்றது. அந்தப் பாதையின் இருபக்கத்திலும் மரங்கள் சாலையாயிருக்கின்றன. அவ்வுயர்மரங்களைப் பார்க்கும்

போதே அவை ஒருகால் பாதசாரிகளுக்கு வேண்டுமளவு நிழல்கொடுத்து உதவிக்கொண்டிருந்தனவென்றும், இப்போதான் சிலநாளைக்குமுன்னே கிளைகளையெல்லாம் கழித்து பட்டமரம்போல் ஆக்கப்பட்டனவென்றும் எவர்க்கும் தெளிவாய்த்தோன்றும். அவைகளை நான் பார்க்கும்போது என்னோடு கூட இருந்த என் நேசர் ஒருவர், ஆச்சரியப்பட்டுப் பிரமித்துநின்ற என்னைப்பார்த்து, முன் இருந்தகைகோவார் ஒருநாள் பகல்வேளையில் தன் கோடைகால மாளிகைக்குப்போம்போது அந்தச் சாலையில் தாழ்ந்திருந்த மரக்கிளையொன்று பட்டு அவர் பாகை கொஞ்சம் அசைந்ததென்றும், அதனால் அவர் மிகக்கோபங்கொண்டு அந்தப் பேதைமரங்களை வேரோடுவெட்டிப்போடும்படி கட்டளையிட்டாரென்றும், பின்பு அநேக அதிகாரிகளுடைய வேண்டுகோளின்மேல் அவற்றின் கிளைகளைமட்டும் கழித்துப்போடும்படியாக அந்த உத்தரவு மாற்றப்பட்டதென்றும் அதன் வரலாற்றை விவரமாய் எனக்குத் தெரிவித்தார். இந்தக் கோடைமாளிகைமாத்திரமேயல்லாமல், மிகப் பெரியவையும் அளவற்ற பொருள்செலவழித்து நிருமிக்கப்பட்டவையுமான வேறு மூன்றுமாளிகைகளிருக்கின்றன. அவற்றுள் மக்வாபுரத்தின் அரண்மனையொன்று; அதில், ஒவ்வொன்றிலும் அறுபதுக்குக் குறையாமல் கிளைவிளக்குகளேற்றிய விளக்குகள் நூறுக்கு அதிகமாயிருக்கக்கண்டேன். அங்கே அரசனுடைய பேதமைக்குத் திருஷ்டாந்தமாய் நடந்திருக்கும் ஒரு செய்கையைக் கொஞ்சம் குறிப்பிக்கிறேன். கண்டீராவு என்பவர் விசேஷதிரவியஞ் செலவுசெய்து அம்மாளிகையைக் கட்டுவித்தார். பின்பு மல்லார்ராவு சிங்காசனம் பெற்றபோது அவர் தன் சோதரனிடத்திலிருந்த பகையைத் தீர்ப்பதற்காகச் செய்த பல செய்கைகளோடு இந்த மாளிகையையும் இடித்துப் பொடியாக்கும்படி கட்டளையிட்டார். அந்த வேலை கொஞ்சம் நடக்கும்போதே அச்செய்தி தெரிந்து அத்தேசத்து ரெஸிடேண்டு அதை வந்து தடுத்துவிட்டார். இப்போது அது இருக்கும் ஆதாரத்தையும் அதைச்சுற்றிக் கீழே இடித்துத் தள்ளியிருப்பவைகளையும் பார்த்தால் முன் அந்த மாளிகை எவ்வளவோ சிறப்புற்று ஆகாயமளாவியதாயிருந்திருக்கவேண்டுமென்று நன்றாய்த் தோன்றுகிறது. இப்போது இடித்துத்தள்ளியிருப்பது இந்தப் பெரியமாளிகையில் மிகவும் சிறிதுபாகந்தான்; ஆயினும் அதை இடிப்பதற்கே 30,000 ரூபாய் பட்டுபெடி ஆயிற்றென்றால் அதன்பெருமை எத்தன்மையதாயிருந்திருக்குமோ!

கைகோவாருடைய ராஜமாளிகை அந்நகரத்தின் மத்தியிலிருக்கின்றது. அது இவ்விந்துதேசத்துச் சிறந்த புராதனக்கட்டடங்களிலொன்று. அதில் விசாலமான கூடங்களும் மாடங்களும் மண்டபங்களும் அறைகளும் அநேகமிருக்கின்றன. அவற்றுள் சில வெகு சிறப்பாய் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள்ளும் இப்போதிய இளவரசரான கைகோவார் ஐரோப்பியர் வந்து காணும்படியாக வைத்துக்கொண்டிருக்கும் இடம் மிக

வும் சிறந்தது. நானும் அங்கே அந்த ராஜகுமாரனைப்போய்ப் பார்க்கும்படி நேரிட்டது. அவர் இப்போது இரண்டுவருஷகாலமாகத்தான் இங்கிலீஷ் பாஷையைக் கற்கத்துவக்கியிருக்கிறாரென்றாலும், இவ்வளவு சீக்கிரத்தில் வெகு தாராளமாய் என்னுடன் இங்கிலீஷ்பாஷைபேசத் திறமையுண்டா யிற்றென்பதைக் கண்டு நான் மிகவும் பிரமித்துநின்றேன். குதிரை சவாரி செய்வதில் அவருக்கிருக்கும் சாமர்த்தியத்தையும் வேட்டையாடுவதிலுள்ள தைரியத்தையும் எடுத்துச் சொல்லி நான் துதிக்கும்போது, அவர் சாந்தமாய், ஆம், நான் நன்றாய்க் குதிரைசவாரிசெய்வேனென்று இங்கிலீஷிலேயே விடைகொடுத்தார். அவர் மிக்க விவேகமும் புத்திகூர்மையும் உடையவர்; அதிக ஆடம்பரமில்லாதவர்; ஆபரணங்களில் ஆசையற்றவர்; இவ்வள வோடுகூடத் தன் வயதுக்குத்தக்க வடிவமும் வலிமையும் உடையவரா யிருக்கிறார். இது, அவருடைய உபாத்தியாயர் மனதைப் பண்படுத்துவ தோடுகூடச் சரீரப்பயிற்சியும் செய்வித்துக்கொண்டுவருவதனால் உண்டா னது; இந்தச் சிறு கைகோவார் படிப்பதற்காக மோதீபாக் என்னுந்தோ ட்டத்திற்கு அருகாமையில் ஒரு இடம் புதிதாய் அமைக்கப்பட்டிருக்கின் றது. அங்கே அவருக்கு விசேஷமாய்ச் சுறுசுறுப்பும் உற்சாகமுமுண்டா கும்படியாக வேறு சில பிள்ளைகளும்கூடப் படிக்கும்படி சேர்க்கப்பட் டிருக்கிறார்கள். கைகோவார் நாள்தோறும் அவ்விடத்திற்குக் காலை பத்து மணிநேரத்திற்குப்போய் மாலை ஐந்துமணிவரையிலிருந்து பாடங்களைப் படிப்பார். அக்காலத்தில் அவருடைய உபாத்தியாயராகிய மேஸ்தர் இல்லியட் என்பவரும் கூடவேயிருந்து போதிப்பார். இப்படியாக, சுதேச ராஜாக்களுடைய அரமனைகளில் சாதாரணமாய் உண்டாகும் துஷ்டசகவா சங்களொன்றும் இவ்விளவரசருக்கு உண்டாகாதபடி கூடியவரையில் வே ண்டிய முன்ஜாக்கிரதைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதுவுமன்றியில் அவ்விடத்திய ராணியார் நல்ல விவேகமும் படிப்பும் உடையவளாகை யால், தன் ஸ்வீகாரபுத்திரனுடைய விருத்திக்காகச் செய்துவருகிற உபா யங்களைக்கண்டு மிகவும் மெச்சி, அவருடைய க்ஷேமத்திற்காக மேஸ்தர் இல்லியட்டும் ராஜா ஸ்ரீ மாதவராவு என்னும் திவானும் செய்துவருகிற முயற்சிகளுக்குத் தானும் சந்தோஷமாய் ஒத்தாசைசெய்துவருகிறாள்.

அங்கே ஐரோப்பியருடைய மாதிரியாய்ச் சிற்சில வீடுகள் கட்டியிருப்ப தைப்பார்த்தேன். அவையெல்லாம் இப்பொழுதுதான் புதிதாய்க் கட்டப் பட்டவைகளாய்க் காணப்படுகின்றன. ஐரோப்பிய உத்தியோகஸ்தர்கள் வந்து குடியிருப்பதற்காக ராஜாங்கத்துச் செலவினாலேயே சில வீடுகள் கட் டிவருகின்றனர். அநேக வருஷகாலமாய்ப் பாதைகளில்லாத இடங்களி லெல்லாம் புதுப்பாதைகள் ஏற்படுத்தப்படுகின்றன. இருப்புப்பாதைக்கு வேண்டிய சாமான்கள் அத்தேசத்தில் கிடைப்பது அரிதாகையால், பம்பாயி னின்றும் அலகாபாத்துக்குப்போகிற பாதையிலிருந்து சுலபமாய்க் கிளை

இருப்புப்பாதையொன்று பிரித்து அத்தேசத்திற்குக் கொண்டுவிடவேண்டு மென்று திவான் அபிப்பிராயப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

அங்கே ஹைஸ்கூலென்னும் ஒரு பெரிய பாடசாலை இப்போது ஒரு குடியிருப்பு வீட்டிலேவைத்து நடத்தப்படுகின்றது. வெகுசீக்கிரத்தி லேயே அதன் பெருமைச்கு ஏற்றதாய் அதற்கென்று சிறந்த மாளிகையொ ன்று ஏற்படும். அதற்காக அத்தேசத்து திவான் இச்சென்னை ராஜதானி சிற்பசாஸ்திரியாகிய சிஷிம் துரையை அழைப்பித்து, சிறந்த கட்டடம் ஏற்படுத்தத் தகுந்த மாதிரியொன்று கேட்டிருக்கிறார். இப்போது அந்தப் பாடசாலைக்குப் பிரதான பண்டிதராயும், மேஸ்தர் பவல் துரையவர்களால் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டவராயுமிருக்கின்ற மேஸ்தர் தேட் என்ப வர் அதன்விஷயத்தில் மிகவும் அக்கரையாய்ப் பாடுபட்டுவருகிறார். அவர் அந்தப் பாடசாலையண்டை கௌரடிசாலையொன்று ஏற்படுத்தியிருக்கிறார். அந்தப் பாடசாலைப் பிள்ளைகளெல்லாம் நாள்தோறும் மாலையில் தங்கள் பாடம் முடிந்தவுடனே அவ்விடத்திற்குப்போய் விளையாடுகிறார்கள். அந்த விடத்தில் கூடுகிற பிள்ளைகளவ்வளவு பிள்ளைகள் இச்சென்னைக் கௌர டிசாலையிலேகூட நான் கண்டதில்லை. அந்தப் பிள்ளைகள் வெகு ஆவ லுடன் விளையாடி வெகு நன்றாய்ச் சரீரப்பயிற்சிசெய்கிறார்கள்.

இப்போது அத்தேசத்து நிலையைப் பார்க்கும்போது, மிக்க சாமர்த்திய மும் ஆட்சித்திறமும் உடையவரான ராஜா ஸ்ரீ மாதவராவு அவர்களுடைய நல்லாளுகைக்குட்பட்டு அது நாளுக்குநாள் விருத்தியாகிக்கொண்டு வருகி றதென்பது தெளிவாய்த் தெரிகின்றது. முன் இருந்த கொடுங்கோன்மை யின் குறிகள் கொஞ்சங்கொஞ்சமாய் மறைந்துகொண்டுவருகின்றன. ஜனங் களுடைய சவுக்கியத்தை அடியோடு உபேக்ஷைசெய்திருந்ததெல்லாம் ஒழிந்துபோய் ஜனங்களுக்கு சவுக்கியம் மேன்மேலும் விருத்தியாகத் தலைப் பட்டிருக்கின்றது. இவற்றையெல்லாம்பார்த்தால் இன்னும் கொஞ்சகாலத் திலேயே அந்த நகரம் நல்லரசாட்சிக்குட்பட்ட தேசங்களுக்கும், சீர்திருந் திய ராஜாங்கத்தில் ஜனங்கள் அனுபவிக்கும் சவுக்கியத்திற்கும் ஒரு சிறந்த மாதிரியாய்விடுமென்று தெளிவாய்த் தோன்றுகின்றது.

மேலும் பரோதாபட்டணம் நகரச்சீர்மைவிஷயங்களிலும் இவ்விந்தி யாவிலுள்ள மற்ற நகரங்களுக்குக் குறைவுபட்டிருக்கவில்லை. அப்பட்ட ணத்தின் உபயோகமற்ற பாகங்களும் விளக்குகள் போட்டு நன்றாய்ச் சுத்தி செய்யப்பட்டு வருகின்றன. தெருக்களையெல்லாம் நன்றாய்ச் செப்பனி ட்டு முக்கியமான வீதிக்கெல்லாம் தண்ணீர் தெளித்துவருகிறார்கள். நகர விசாரணைச்சேவகர்கள் எப்போதும் பட்டணத்தைச்சுற்றிக் கண்காணித் துக்கொண்டேயிருக்கிறார்கள். அந்த நகரவிசாரணைமுழுதும் துரைத்தன உத்தியோகஸ்தர் ஒருவர்வசத்தில் நம்பி ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றது. இப்படியாக அந்த அரசாட்சியிலுள்ள சீர்திருத்தங்களை நன்றாய்ப்பார்த்த

எனக்கு, ஸர். மாதவராவு அந்த நகரத்தில் சவாரிசெய்துகொண்டு வருங் காலத்தில் அவர்க்கு நடக்கிற மரியாதைகளும் கவுரவங்களும் ஒரு அதி சயமாய்த் தோன்றவில்லை.

அரமனைச்செலவு விஷயங்களை ஸ்ரீ மாதவராவு மிகவும்மிதப்படுத்தி வருகிறார். முன் இருந்த ராஜாக்களோ இந்த விஷயத்தில் கணக்கு வழக்கில்லாமல் அவரவர் புத்திக்குத் தோன்றினபடியே செலவுசெய்து கொண்டிருந்தார்களென்பது யாவர்க்கும் நன்றாய்த் தெரிந்ததுதான். அநி யாயமான அளவற்ற வீண்செலவுகளும், உபயோகமில்லாமல் எண்ணி றந்த ஆபரணங்களைச் சேகரிப்பதுமே வருஷவாரியில் கோடிரூபாய்க்கு மேல் செலவாய்க்கொண்டிருந்தது. தம்மண்டைவந்து இச்சகம்பேசுகிற வர்களிடத்திலும் தம்மிஷ்டர்களிடத்திலும் அந்த ராஜாக்களுக்கிருந்த பெருங்கொடைக்குணந்தான் ராஜாங்கத்துப்பொருள்களை விசேஷமாய் வாரி இறைப்பதற்குப் பெருங்காற்றாயிருந்தன. அவையெல்லாம் இப் போது மாறிப்போயிற்று. ஆபரணக்கொட்டடிக்கு அதிகமாகச் சுமை யேற்றுபவர் இனி ஒருவருமில்லை. உபயோகமற்ற செலவுகளும் இனி நேரிடக்காரணமில்லை.

இப்படிச் செலவுகள் அநேகமாய்ச் சுருக்கப்பட்டாலும் முன் நடத்தி வந்தவகைகளை அடியோடு நிறுத்திப்போடவில்லை. அதற்கு இரண்டொரு உதாரணஞ்சொல்லுகிறேன். இதுவரையில் மாதம் 10,000 ரூபாய் உப காரச்சம்பளம் பெற்றுவந்த மல்லாராவினுடைய வைத்தியனுக்கு இப் போது மாதம் 1,000 ரூபாய் சம்பளமாக்கப்பட்டது. வருஷத்தில் 12,000 ரூபாய் சம்பளம் பெற்றுக்கொண்டிருந்த மல்லன் ஒருவனுக்கு மாதம் 500 ரூபாய் சம்பளமாகக் குறைக்கப்பட்டது. இப்படியே வாத் தியக்காரன் கூத்தாடி பாடுகிறவன் தாசிமுதலிய உபயோகமற்ற பரிஜநங்க ளுள் யாராவது நீங்கினால் காலியான இடத்திற்கு மறுபடி பதிலேற்படுத்து வதில்லை. இவ்வகையாக மிகுத்தப்பட்ட சுமார் 10 லக்ஷம் ரூபாய் நகரத் தின் சீர்திருத்தத்திற்காகவும், குடிகளுடைய சவுக்கியத்திற்காகவும், காவற் சேவகர்கள் ஏற்படுத்துவதற்காகவும் உபயோகப்பட்டுவருகின்றது.

இவ்வளவு சொல்லியும் ராஜபூஷணங்களைப்பற்றிச்சொல்ல மறந்து போனேனே! பரோதாநகரத்தைப் பார்க்கப்போகிறவன் எவனும் அவ்வி டத்துப் பூஷணங்களின் அதிசயத்தைப்பாராமல் வரான். அது சகல ஐசு வரியத்திற்கும் ஆஸ்தானமானது. அவ்வளவு ஐசுவரியம் இவ்வுலகத்தில் மற்றெங்கும் காணப்படாது. வச்சிரஹாரங்களும், மரகதஹாரங்களும், பற் பலவிதமான சிறந்த கற்கள்பதித்த பலவித கணையாழிகளும், இவைபோ ன்ற மதிப்புக்கிணங்காத இன்னும் பற்பல ஆபரணங்களும், அங்கே நிறை ந்திருக்கின்றன. கணையாழிகளுள் ஒன்றில் அரை ரூபாய் அவ்வளவு உருவ

முள்ள வைரமணி ஒன்றிருக்கின்றது. அந்த ஆபரணக்கூட்டத்தில் சிறந்த வச்சிரஹாரம் ஒன்று கண்டேன். அதைப் பல லக்ஷம் ரூபாய் மதிப்பதாகச் சொல்லுகிறார்கள். இவைகளையெல்லாம் அரமனைக்குள் ஒரு அறையில் வெள்ளிச்சால்களிலும் பித்தளைச்சால்களிலும் போட்டு மராட்டியன் ஒருவனுடைய அதீனத்தில் வைத்திருக்கிறார்கள். அந்த மராட்டியன் சுமார் 20 வருஷகாலமாய் ராஜாங்க உத்தியோகஸ்தனாயிருப்பதுமன்றியில், தங்களுக்கே வமிசபரம்பரையாய் ராஜாங்கத்தில் ஆபரண விசாரணைத்தலைமை உத்தியோகம் கொடுக்கப்பட்டுவருகிறதென்று பெருமைபேசிக்கொண்டிருக்கிறான். நாம் மேலேசொன்னபடி இந்தப் பூஷணங்கள் அநேகங் கோடிரூபாய் மதிப்புடையவைகளாயிருக்கின்றன. முன்னிருந்த கைகோவாருக்குப் பூஷணங்களில் விருப்பம் அதிகம். ஒருகால் ஒரு வர்த்தகன் உயர்ந்த ரத்தினம் ஒன்றை வைத்துக்கொண்டு அந்த ராஜனண்டை காத்திருந்தான். அதற்கு அவன் சொன்னவிலை 9,00,000 ரூபாய். அப்போது அந்த ராஜாவின் கையில் தனமில்லாமற்போகவே, அவன் வர்த்தகனைப்பார்த்து: நீ இப்போது எனக்கு 8,00,000 ரூபாய் கடன் கொடுப்பதானால் நான் இந்த ரத்தினத்தை வாங்கிக்கொண்டு, பொக்கஷசாலையில் 12,00,000 ரூபாய் நீ வாங்கிக்கொள்ளும்படி உத்தரவுகொடுக்கிறேனென்றதற்கு அவன் சம்மதிக்கவே, ராஜா அப்படியே செய்தான். இப்போது சிலநாளைக்குமுன்னே அந்த ராஜனை இச்சென்னைக்குப் பிடித்தனுப்பியபிறகு தேடிப்பார்க்கையில் அந்தப் பூஷணம் அங்கெங்கும் அகப்படவில்லை. அந்த வர்த்தகன் தன் சீட்டுக்குப் பணம்கொடுக்கவேண்டுமென்று பரோதா ராஜாங்கத்தாரை வற்புறுத்திக்கொண்டிருக்கிறான். எப்படியாகுமோ தெரியவில்லை.

அவ்விடத்திலிருக்கிற மிருகசாலையைப்பற்றி இன்னும் ஒன்றும் சொல்லவில்லையே? அது வெகு விநோதமானது. அவ்விடத்தில் யானை, காண்டாமிருகம், எருமைக்கடா முதலியவைகளைப் பிடித்துச் சண்டைவிடுவார்கள். அதற்காக இந்த மிருகங்களெல்லாம் மிகவும் பெரியவைகளாய்த் தேடி வளர்க்கப்படுகின்றன. மான், சிறுத்தை முதலியவைகளும் அதற்காகப் பழக்கப்படுகின்றன. சங்கதி அதிகமாய் வளர்ந்துபோகிறதென்றும், அதிகமானால் படிப்போர்க்கு அருவருப்பாயிருக்குமென்றும் பயந்து அதைப்பற்றி விசேஷமாய் எழுதாமல் ஒழிந்தேன்.

அப்பட்டணத்து ஜனங்கள் தங்களுக்கு ஒருநாளும் இல்லாத பத்திரமும் க்ஷேமமும் இப்போது விசேஷமாய்க் கிடைத்திருப்பதைப்பற்றி மிகக் களிப்படைந்திருக்கிறார்களென்பது, நான் பட்டணத்தைச்சுற்றிப் பார்க்கும்போது, அவர்கள் கொண்டிருந்த முகக்களையினாலேயே தெளிவாய்த் தெரியவந்தது. இத்தனைகாலமாய்ப் பயத்தினால் தங்களுக்குப் பொருளிருக்கிறதென்பதையே தெரிவியாமல் மூலையில் பதுங்கிக்கொண்

டிருந்தவர்களெல்லாம் இப்போது வேண்டியபடி ஆடையாபரணங்கள் அணிந்துகொண்டு, இரவிலாகட்டும் பகலிலாகட்டும் நிர்ப்பயமாய் வீதிகளில் இங்கும் அங்கும் உலாவித்திரிவதே இப்போதிய துரைத்தனத்தில் அவர்களுக்குள்ள நம்பிக்கையை வெளியிடுகிறதல்லவா?

முக்கியமாய் நான் அந்நகரத்தைவிட்டுத் திரும்பும்போது, இந்தப் புது ராஜாங்கத்திலுள்ள சீர்மையைக் கண்டு களிப்பும், அதன் மந்திரியாகிய ஸ்ரீ மாதவராவுவின் ஆட்சித்திறமையைப்பார்த்துப் பெருமையுமாயே திரும்பினேன். இன்னும் சிறிதுகாலத்தில் அவர்க்கு, பரோதாநாட்டை உத்தரிப்பித்தவரென்று பேரும் பிரதிஷ்டையும் அதிகமாய் உண்டாகுமென்று எனக்கு உறுதியாய்த் தோன்றுகின்றது. இந்தப் பிரபு சுபாவத்திலேயே நல்ல புத்திமதிகளுடையவராய் நல்ல படிப்பின் பெருமையும்பெற்று ஒரு ஆஸ்தானத்திற்கு மிகவும் நம்பிக்கையுள்ள மந்திரியாயிருப்பதற்கே ஏற்றதன்மையுடையவராயிருக்கிறார். பிரிட்டிஷ் துரைத்தனத்தாருடைய மனோரதங்களையெல்லாம் சரியாகவே நடப்பித்து அவர்கள் செய்யும் சகல கவுரவத்திற்கும் பாத்திரமாயிருக்கிறார். அவர் வட இந்துஸ்தானத்தில் சீர்திருத்தமுள்ள சுதேச ராஜாங்கங்களுக்கெல்லாம் பரோதாராஜ்யம் ஒரு மேல்வரிச்சட்டமாகும்படி வெகுசீக்கிரத்தில் செய்துபோடுவார் என்று நான் சொல்லத்துணிகிறேன். இந்தப் பெருங்காரியத்தை அவர் தலைக்கட்டுமாறு அவருடைய தேகவலிமையும் சவுக்கியமும் எந்நாளும் குறைவுபடாது விருத்தியாகவேண்டுமென்று கடவுளை நாம் பிரார்த்திக்கக்கடவோம்."

தன்முயற்சியுடைமை.

"செய்கருமத்தில் முயற்சியுடையோர்க்குத் தெய்வம் உதவும்." இது கைகண்ட நீதி. கடுகிற் பெரிய கடல்புகுவதுபோல் இச்சிறு வாக்கியத்தில் எண்ணித்தொலையாத மனுஷருடைய அனுபவசித்தி அடங்கியிருக்கின்றது. தன்முயற்சியுடைமையே அவரவரிடத்தில் முளைத்து வளரும் அனைத்திற்கும் முதற்காரணம். ஒரு தேசத்தில் இம்முயற்சி பலரிடத்தில் விளங்குமானால், இதுவே அத்தேசத்திற்கு வீரமும் வலிமையும் சுரக்கும் மெய்யூற்றாகும். புறத்தினின்று வரப்பெறும் உதவி பெரும்பாலும் பலத்தை ஒடுக்கும், அகத்தினின்று உண்டாம் உதவியோ தப்பாமல் பலஞ்செய்யும். அவனவன் தன் கருமத்தைத் தானே செய்யவேண்டும். பிறர் செய்யச் சம்பவித்தால், தனக்கு அதில் முயற்சியும் அக்கறையும் ஒருவாறு இல்லாமற்போம். பெரும்பாலும் தாமே வழிபிடித்துப் போகாமல் பிறர் பின்செல்வோரும், தம்மைத்தாம் அடக்கி ஆளாது

பிறர் அதிகாரவசப்படுவோரும் எதற்கும் இயல்பற்று அகதிகள் ஆவார்கள்.

ஒருவன் செய்யவேண்டிய கருமத்தை அவனுக்குச் செய்து உதவ சிறந்த ஏற்பாடுகளாலும் முடியாது. அவைகள் சிறைப்பட்டுத் தன் உரு மறைந்திருக்கும் அவனைத் தோன்றி வளர்ந்து திருந்தும்படி சிறைநீக்கிவிடும். அவைகளால் அவனுக்கு ஆகத்தக்க சகாயம் எல்லாம் கூடி இம்மாத்திரந்தான். மனுஷர் இதை நினையாமல், முக்கியமாய்த் தாம்தாம் செய்வது நடப்பதுமுதலியவைகளாலல்ல, தந்தேசத்தில் வழங்கும் ஏற்பாடுகளாலேயே சுகமும் க்ஷேமமும் பெற்று வாழலாமென்று நம்பிக்கொண்டுவருகிறார்கள். ஆனதனாலேயே, மனுஷருடைய க்ஷேமத்திற்கு அநுகூலிக்கும் சாதனங்களில் ஒன்றாகிய தேசச்சட்டத்தின் பெருமையை மிதமிஞ்சிப் பாராட்டுகிறார்கள். குடிவளமுள்ள பெருநகரங்களில் இருப்பவர்கள் மூன்று அல்லது ஐந்து வருஷத்திற்கு ஒருமுறை பத்துலக்ஷம் பெயர்வரையும் கூடி இரண்டொரு ஜனப்பிரதிநிதிகளைத் தெரிந்து சட்ட நிரூபணசபைக்கு அனுப்புவார்கள். அவனவன் இந்தச் செய்கடனை மனமறிய உண்மையாய்ச் செய்தாலும், கேவலம் இவ்வேற்பாட்டால் அவனவனுக்கு அற்பமாவது க்ஷேமமும் சிறப்பும் உண்டாகா. அரசர்க்குரிய தொழில் பெரும்பாலும் ஒன்றை விதிப்பதல்ல, விலக்குவது; செய்வதல்ல, தடுப்பது என நாளுக்குநாள் மயக்கமறத் தெரிகின்றது. அரசர்க்குரிய தொழிலின் பெருமை முக்கியமாய் ரக்ஷை என்பது. ரக்ஷை ஜீவரக்ஷை சுதந்தரரக்ஷை சொத்துரக்ஷை என மூவகைப்படும். புத்திபூர்வமாய் நிர்வகித்தால் சட்டம், சரீரத்தாலாவது மனதினாலாவது மனுஷர் உழைக்கும் உழைப்பின் பயனை அச்சமற்று அனுபவிப்பதற்குக் காவலாகிய அரணாம். இவ்வரண்வளைக்க அவரவர்க்குச் செல்லும் செலவு சொற்பம்; ஆனால் எவ்வளவு நிர்ப்பந்தமான சட்டமும் சோம்பனை முயற்சியுடையோர் ஆக்கமாட்டாது; சொத்தை அழிப்பவர்களுக்கு நாளைக்கு உதவுமென்று சேர்த்துவைக்க முன்புத்தி உண்டாக்காது; வெறிக்கக்குடித்து வழக்கப்பட்டவர்களை அவ்வழக்கம் தவிர்க்கும்படி செய்யமாட்டாது. இச்சீர்த்திருத்தம் மற்றொன்றாலல்ல, அவரவர் முயற்சியினாலும், சிக்கனத்தினாலும், தம்மை ஒறுப்பதனாலுமே உண்டாகும்; பெரிய சுதந்திரங்களாலல்ல, உத்தமசாதனங்களால் விளையும். ஆனதுபற்றியே திருவள்ளுவநாயனாரும்,

> "தெய்வத்தா லாகா தெனினு முயற்சிதன்
> மெய்வருத்தக் கூலி தரும்"

என்று தன்முயற்சியின் பெருமையை விளக்கிக்காட்டினார்.

தக்காணத்துப் பூர்வகதை.

ஜவந்தியம்மாள் கதை (தொடர்ச்சி.).

அங்கதேசத்தரசனுயிருந்த சிங்கராஜனென்பவன், தன் விருப்பத்திற்கு விரோதமாய்த் தன் மகன் ஜவந்தியம்மாளென்னும் மந்திரிமகளை விவாகஞ்செய்துகொள்ளவே, அவனைத் தன்னுட்டினின்றும் துரத்திவிட்டான். அப்படித் துரத்தப்பட்ட லோகதாஸனென்னும் ராஜகுமாரன் ஜவந்தியம்மாளையும் பார்வதியம்மாளென்னும் தன் மூத்தமனையாளையுங் கூட்டிக்கொண்டு காட்டுக்குப்போய், அங்கே தன் மனைவிகள்பட்ட பரிசிரமத்தைப் பார்க்கமாட்டாமல் அவர்களைத் தனியேவிட்டு ஓடிப்போயினுன். ஜவந்தியம்மாள் மிக்க தைரியசாலியாகையால் அதைக் கண்டு சிறிதும் விசனப்படாமல், எப்படியாவது அவனைத் தேடிப்பிடிப்போமென்று தான் ஆண்வேஷந்தரித்து ஜவந்திராஜனெனப் பெயர்கொண்டு, பார்வதியம்மாளைத் தன் பெண்சாதிபோலப் பாவித்திருக்கச்செய்து அண்டையிலிருந்த ஒரு பட்டணத்திற்குப்போய்க் கொஞ்சகாலம் அந்த ராஜனிடத்தில் ஒரு உத்தியோகஸ்தனுய்ப் பெருந்தகைமைபெற்று வாழ்ந்திருந்தாள்.

இப்படியிருக்க ஒருநாள், அந்த ராஜாவின் ஏவலினுல் இராணிக்கு உயர்ந்த பீதாம்பரமொன்று தேடிக்கொண்டு வரும்படி, ராக்ஷதர்களின் சீமையிலேதான் அது கிடைக்குமென்று அத்தேசத்திற்குப்போகப் புறப்பட்டாள். போகும்போது வழியில் முதலில் ஒரு பட்டணத்தில் தங்கப்போய் அங்கே ஒருவர்க்கும் அடங்காமலிருந்த ஒரு குதிரையை அடக்கி, அவ்வடங்காக்குதிரையை அடக்குகிறவனுக்கல்லாது மற்றெவனுக்கும் தான் மணமாலை சூட்டுவதில்லையெனப் பிரதிஞ்ஞைசெய்திருந்த அப்பட்டணத்தரசன் மகளைத் தான் திரும்பிவரும்போது மணம்புரிவதாகச்சொல்லிவிட்டு, அங்கிருந்து புறப்பட்டு மற்றொரு பட்டணத்திற்குப்போய் அப்பட்டணத்தரசன் பெண் பிடித்திருந்த பிடிவாதத்தைக்கேட்டு, அவள் நீராடுவதற்காகக்கட்டிய வாவியின் ஆகாயமளாவிய மதிலை எளிதாகத் தாவி, அவளைக் கலியாணஞ்செய்துகொள்வதற்கும் முன்போலவே வாக்குதத்தஞ்செய்து மற்றொரு பட்டணத்திற்குப்போனுள். அப்பட்டணத்தரசன், ஒருபெரிய உத்தியானவனத்தின் நடுவே வெள்ளிமாமொன்று தங்க இலைகளும் முத்துமலர்களுமாய் முளைத்திருக்கப் பத்துவயதிலே கனவுகண்டதாயும், அதுமுதல் அப்படிப்பட்ட விருக்ஷத்தைக் காண அவன் மிக்க ஆவல்கொண்டிருப்பதாயும், அந்தக் கனவைக்கேட்டு அவன் மகள் அப்படிப்பட்ட மரத்தைக் கண்டு

பிடித்துக் காட்டுகிறவனையே தான் கலியாணம் செய்துகொள்வதாய்த் தீர்மானித்திருப்பதாயும் கேள்விப்பட்டு, இதென்னவென்று அதிசயித்துக்கொண்டே அண்டையிலிருந்த ஒரு ஏரிகரையிலே இராத்திரிபடுக்கப்போனுள். அங்கே ஒரு சர்ப்பம் வாயிலே வைரமணி ஒன்றைக் கவ்விக்கொண்டு தண்ணீரிலிருந்து வெளியே வரக்கண்டு, அதைக்கொன்று அதின் வாயிலிருந்த ரத்தினத்தைக் கையிலெடுத்துக்கொண்டு காலையில் நீராட ஏரியிலிறங்க, உடனே அந்த நீர் இரண்டாய்ப்பிரிந்து வழிவிடவே, அதன் வழியேபோய்ப் பார்த்தாள். அங்கே ஒரு சிங்காரத்தோட்டத்தின் மத்தியில் அந்த ராஜன் கனவிற்கண்டவிதமாக வெள்ளிமரத்திலே தேவகன்னிகை போன்ற ஒரு அழகி ஊசலாடிப் பாடிக்கொண்டிருக்கக்கண்டாள். அவளும் முன்சொன்ன இரண்டு ராஜகன்னிகைகளைப்போலவே, தன்னைக் கலியாணஞ்செய்துகொள்ளும்படி வேண்டினதற்கு ஜவந்தியம்மாள், அவர்களுக்குச் சொன்னவிதமாகவே சொல்லிவிட்டு, வேண்டும்போதெல்லாம் அவளைக் காணுதற்குக் கருவியாய்ச் சிறுவீணையொன்று அவளிடத்தினின்றும் பெற்றுக்கொண்டு திரும்பி அப்பட்டணம் வந்து மந்திரியைக்கண்டு, உங்கள் ராஜன் கனவிற்கண்ட விருக்ஷத்தை யாராவது நேராகக்காட்டினல் அவனுக்குச் செய்யப்போகிற வெகுமதி என்னவென்று கேட்க, மந்திரி: ராஜா அவனுக்குத் தன் மகளை மணம்புரிவிப்பதுமன்றியில், தன்னுட்டிற் பாதியும் கொடுக்கச் சித்தமாயிருக்கிறுர் என்றுன் என முன் சஞ்சிகைகளில் விவரமாய்ச் சொன்னேமல்லவா? பின்நடந்த வரலாறு என்னவெனில்:—

இவ்வாறு மந்திரிசொன்னதைக்கேட்டு ஜவந்தியம்மாள்: ஆனல் சந்தோஷம்; அவர் அப்படிச்செய்வது உண்மையானல், நான் அதைக் காட்டுகிறேன்; என்றைக்காவது ஒருநாள் இராத்திரி அம்மாத்தை அவர் வந்து நன்றுய்ப் பார்க்கலாம்; அம்மரம்மாத்திரம் அவர்க்குச் சொந்தமாய்க் கிடைக்கமாட்டாது. இச்செய்தியை உங்கள் அரசனுக்கு அறிவித்து அவர் கருத்தைத் தெரிவியுங்கள் என்று சொல்லிவிட்டு வீடுவந்து சேர்ந்தாள்.

இச்செய்தியை மந்திரி மகாராஜாவுக்குத் தெரிவித்து அவருடைய அனுமதியால் மறுநாள், பிரதானி முதலிய உத்தியோகஸ்தர்களும் பரிவாரங்களும் சூழ, அந்தத் தோட்டக்காரன் வீட்டுக்கு வந்து, நீ சொன்னபடியே ராஜா சம்மதித்திருக்கிறுர்; இன்று இராத்திரியே அந்த விருக்ஷத்தைப் பார்க்கவேண்டுமென்கிறுரென்றுசொல்ல, ஜவந்தியம்மாள்: அப்படியே ஆகட்டும்; ராஜா தம்முடைய பரிஜனங்களோடு வந்தால் தாம் கண்டகனவு உண்மையென்பதைத் தெரிந்துகொள்ளலாமென்றுள். அதைக் கேட்டுக்கொண்டு அவர்கள் அரண்மனைபோய்ச் சேர்ந்தார்கள். அவர்களை அனுப்பிவிட்டு

ஜவந்தியம்மாள் நடுக்காட்டிற்சென்று தன் சிறு வீணையை வாசிக்க, உடனே ரத்தினம்மாள் முன் அந்தத் தோட்டத்தின் நடுவே தென் பட்டதுபோலவே சகல வைபவங்களோடு வெள்ளிவிருக்ஷத்தில் ஊசலாடினபடியே வந்து தோன்றினாள். வந்து தோன்றி அவள் ஜவந்தியம்மாளை நோக்கி: உனக்கென்னவேண்டுமென்று கேட்க, அவள்: நான் இன்று ராத்திரி ராஜாவை இங்கு அழைத்துவருவேன்; நீ தப்பாமல் அவன் கண்ணுக்குக் காட்சியளிக்க வேண்டுமென்ன, அப்படியே அழைத்துவா; அவன் சுகமாய் வந்து என்னைப் பார்க்க லாம் என்றாள்.

இராத்திரி அரசன்முதலானோர் அனைவரும் வந்து அதைப் பார்த்தபோது யாவரும் இதென்னவென்று பிரமித்துநின்றார்கள். மனிதசஞ்சாரமில்லாத ஒரு பெருங்காட்டின் நடுவே மிகவும் அழகான மாளிகையொன்று தெரிந்தது. அம்மாளிகை முழுதும் பொன் வெள்ளி ரத்தினம் முதலியவைகளால் வெகு விநோதமாய் அலங்கரிக்கப்பட்டு, சூரியனையும் ஏளனஞ்செய்பவைபோன்ற பல விளக்குகளாற் சிங்காரிக்கப்பட்டிருந்தது. மனிதர் ஒருவரும் கண் ணுக்குத் தோன்றாமலே பல கீதவாத்தியங்கள் காதுக்கினிப்பாய்க் கேட்டுக்கொண்டிருந்தன; அகில் சந்தனம் முதலியவைகளால் அம் மாளிகையிலுண்டான வாசனைகள் ஆகாயமெங்கும் வீசிப்பரந்தன. அம்மாளிகையைச் சுற்றிலும் தனக்குத்தானே நீரூறிப்பாய்ந்து கொண்டிருந்தது. அப்படிப்பட்ட அரண்மனையின் உத்தியானவன த்து மத்தியிலே பொன்னிலைகளும் ரத்தினப்பழங்களும் நிறைந்த வெள்ளிமரமொன்றிருக்கக்கண்டார்கள்.

காலையில் இவையெல்லாம் மறைந்துபோயின. அரசன் இவ்வதி சயங்களையெல்லாம் கண்டு மதிமயங்கி ஆனந்தக்கடலில் அமிழ்ந்த வனாய், சொன்னசொல் தவறாமல், நிர்மானுஷியமான ஒரு பெருங் காட்டை ஒரேஇரவில் தேவலோகமாக மாற்றத்தக்கவனல்லாது மற்றெவன் நமக்கு மருமகனாகத்தக்க மகிமையுடையவனென்று தனக்குத்தானே அகமகிழ்ந்து, தன் மகளை அவனுக்கு மணம்புரி வித்துத் தன் ராஜ்யத்திலும் பாதிகொடுக்கச் சம்மதித்து, தன் மக ளைக் கலியாணஞ்செய்துகொள்ளும்படிவேண்ட, ஜவந்தியம்மாள்: அப்படியே ஆகட்டும், இப்போது நான் எங்கள் அரசனுடைய காரி யமாய் ஓரிடத்திற்குப் போய்க்கொண்டிருக்கிறேனாகையால், முன் னே அதைப்போய் முடித்துக்கொண்டு வரும்படியாகச் செலவு கொடுங்கள்; என் காரியத்தை நிறைவேற்றிக்கொண்டு திரும்பிவ ரும்போது அவசியமாய் இப்பட்டணத்திற்குவந்து சிலநாளிருந்து உங்கள் இஷ்டப்படி நடக்கிறேனென்றாள். அதற்கு அவர்களெல் லாரும் சம்மதித்து, தங்கள் தேசம் தாண்டுமளவும் வழிகொண்டு விட்டு அவளை அனுப்பினார்கள்.

அங்கிருந்து ஜவந்தியம்மாள் ஒரு தடையுமின்றி அநேகநாள் யாத்திரைசெய்து தொலேதூரம் போயினுள். எவ்வளவுதூரம் போனுலும் ராக்ஷதர் சீமைக்குப் போகவேண்டிய வழிக்கு ஒருவிதமான குறிப்பும் காணப்படவில்லே. அப்படிப்பட்ட வருத்தமானகாலத்தில் அவள் ரத்தினம்மாளே நினேத்துக்கொண்டு அவள் கொடுத்த சுவர்ணவீணேயை வாசித்தாள். உடனே அவள் எதிரே வந்து நின்று, நாயகனே! உனக்கு என்னகுறையென்று கேட்டதற்கு, ஜவந்தியம்மாள்: என் கண்மணியே! நான் அரசன் கட்டளேயினுல் ராக்ஷதர் சீமையைக் காணவேண்டுமென்று இக்காட்டில் நெடுநாளாய் அல்லாடித்திரிகிறேன்; எத்தனேநாள் திரிந்தும் அது இருக்குமிடந் தெரியவில்லே; அத்தேசமிருக்குமிடம் உனக்குத் தெரியுமா? என்னே எப்படியாவது அவ்விடத்திற்கு அழைத்துக்கொண்டு போவாயா என, அவள்: நீ ஒருபோதும் தனியே அவ்விடத்திற்குப் போகமாட்டாய்; ஆறுமாதப் பிரயாணதூரம் சுற்றளவுள்ள அரக்கர்சீமையைச் சுற்றிலும் எண்ணிறந்த ராக்ஷதர்கள் காவல்காத்துக்கொண்டிருக்கிருர்கள். இப்பூமியிலுள்ள மரங்களேக் கணக்கிட்டாலும் கணக்கிடலாம், அங்கே காவல்காக்கும் அரக்கர்களேக் கணக்கிடமாளாது. அவர்களுக்குத் தெரியாமலும் அவர்களுடைய அனுமதியில்லாமலும் அத்தேசத்துள் ஒரு ஈ காக்கைகூட நுழையக்கூடாது. தங்கள் தேசத்தில் மனிதன் வரப்பார்த்து அவர்கள் ஒருபோதும் பொறுக்கமாட்டார்கள். நமது கண்ணுக்கு அவர்கள் ஒருகாலும் தென்படார்கள். நாம் போவதுமாத்திரம் அவர்களுக்கு நன்ருய்த்தெரியும். நம்மைப் பார்த்தமாத்திரத்தில் கைவேறு கால்வேருகக் கிழித்துப்போடுவார்கள். ஆயினும் நீ அதைரியப்படவேண்டாம்; நான் கூடியவளவு உனக்குத் துணேசெய்கிறேன்; உன் இஷ்டத்தை நீ நிறைவேற்றிக்கொள்ளும்படியான வழியொன்று சொல்லுகிறேன் கேள்; இந்தக் கணேயாழியைக் கைக்கொள்ளு; (இப்படிச் சொல்லிக்கொண்டே ஒரு விலேயில்லா மோதிரத்தை அவள் கையிற்கொடுத்தாள்.) இம்மோதிரம் என் உயிர்த்தோழியான ராக்ஷதராஜன்மகள் எனக்குக் கொடுத்தது; இது உன்னே ஒருவர் கண்ணுக்கும் தெரியாமல் மறைந்திருக்கச்செய்யும்; அதோ வெகுதூரத்துக்கப்பால் மேகமண்டலம்போல் இருண்ட கொடிமுடியுள்ள மலேயொன்று தோன்றுகிறதுபார்; அது ராக்ஷதர் சீமையின் ஓரத்தில் அதற்கு ஒரு எல்லேக்கல்போலிருக்கின்றது. நீ இங்கிருந்து போய் அம்மலேநுனியில் ஏறவேண்டும்; ஏறியபிறகு நான் கொடுத்த இம்மோதிரத்தின் மணியை உன் உள்ளங்கைக்கு நேராய்த் திருப்பிக்காட்டு; உடனே நீ அம்மலேநுனியிலிருந்து வெகுதூரம் கீழே அதன் அடிவாரத்திற்சென்று, அங்கிருக்கும் ராக்ஷதராஜன் அரண்மனேயில், அவன் மகள் எதிரேபோய் நிற்கக்காண்பாய்; அம்மகளேப்பார்த்து நீ என்னுடைய மணமகனென்று சொல்; எனக்காக

அவள் உன்னை மிகவும் நேசித்து ஆதரிப்பாள் என்று சொல்லி விட்டு மறைந்துபோனாள்.

ஜவந்தியம்மாள் அதைக்கேட்டு அவள் சொன்னபடியே வெகு தூரத்திலே தெரிந்த பர்வதத்தை நோக்கிச்சென்று அதின் நுனியி லேறி அங்கே அவள் சொன்னபடியே கையிலிருந்த மோதிரத்தை உள்ளங்கைக்கு நேராய்த் திருப்பினாள்; திருப்பினஉடனே அவ்வி டத்திலிருந்து கீழேவிழ ஆரம்பித்தாள். பின்பு அப்படியே கீழே போனாளோ, போனாளோ! ஓயாமல் நெடுநேரம் போய்க்கொண் டிருந்தாள். இப்படி வெகுதூரம் போனபிறகு கடைசியில் ஒரு மணிமயமான மண்டபத்தின் நடுவேபோய்ச்சேர்ந்தாள். அந்த மண் டபத்தை வர்ணிக்க ஒருவராலும் ஆகாது. அது பொன்னாற் சுவரெ டுத்து வச்சிரத்தால் வேலைப்பாடுகள் செய்து வெகு அழகாய் அலங் கரித்திருந்தது. எந்தப்பக்கம் திரும்பினாலும் எவ்வளவுதூரம் பார்த் தாலும் அவள் கண்ணுக்கு ராக்ஷதன்தவிர வேறொன்றும் தோன்ற வில்லை. அந்த மண்டபத்தின் நடுவே தந்தத்தாற்செய்து தங்கத்தால் சித்திரித்த திவ்விய சிங்காசனத்திலே, வெள்ளிமலையில் மின்னல் மின்னுவதுபோல, மனதினாலேகூட நினைக்கக்கூடாத சவுந்தரியமு டையவளாய் ராக்ஷதராஜன் மகள் உட்காந்திருக்கக்கண்டாள். அவள் திவ்வியமான ஆடையாபரணங்கள் அணிந்து பார்ப்போர் கண் ணைக் கவரும்படியான தன்மையுடையவளாயிருந்தாள். இவற்றை யெல்லாம் சொல்லியென்ன? அவளுடைய சங்கம்போன்ற கழுத் தும், தாமரைமலர்போன்ற முகமும், கருநெய்தல்போன்ற கண் களும், வில்போன்ற புருவமும், கொவ்வைக்கனிபோன்ற இதழும், தாமரையிதழ்போன்ற கையும், தங்கக்கொடிபோன்ற தேகமும் பார்க்கப்பார்க்கப் புதுமையாயிருந்தன. ஜவந்தியம்மாள் கொண்டு வந்த மோதிரத்தின் மகிமையால் அவள் காவலாளருடைய கண்ணு க்குத் தெரியாமலிருந்தாலும் ராக்ஷதன் மகளுடைய கண்ணுக்குமா த்திரம் நன்றாய்த் தெரிந்தாள். அவ்வரக்கன்மகள் இவளைப்பார்த்த வுடனே திடுக்கிட்டு, நீ யார்? நீ இங்கேவந்தவிதம் என்னவென்று கேட்க, ஜவந்தியம்மாள்: நான் ஜவந்திராஜன்; ரத்தினம்மாளுடைய மணமகன்; நீ அவளுக்குக் கொடுத்திருந்த மந்திரமோதிரத்தின் மகி மையால் நான் இவ்விடம் வந்துசேர்ந்தேன் என்றாள். அதைக்கே ட்டு அந்த ராக்ஷதன் மகள்: அப்படியா? மிகவும் சந்தோஷம்; க்ஷே மமா? தெய்வாதீனமாய் நீ இவ்விடத்திலுள்ள அபாயமொன்றுக்கும் அகப்படாமல் பத்திரமாய் வந்துசேர்ந்தையே! என்னைச் சுற்றிலும் என் தகப்பனால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற காவலாளர்கள் உன்னைக் கண்டார்களானால் உடனே கொன்றுபோடுவார்களே! அவர்கள் கையில் அகப்பட்டுக்கொண்டபிறகு உன்னைத் தப்புவிக்க என்னா லுமாகாது. அதிருக்கட்டும், இப்போது நீ இங்கே வந்தகாரியம் என்னவென்று கேட்டதற்கு, அவள்: என் அழகியே! எனக்கு வே

றென்னகாரியம்; உன்னைப் பார்த்துப்போகவேண்டுமென்றே வந்தேன்; உன் பெயரென்ன? இதென்ன நீமாத்திரம் இங்கே தனித்து இருக்கிறையே என்ன, ராக்ஷதராஜன்மகள்: நான் இந்த ராக்ஷதராஜனுக்கு ஒரேமகள்; எனக்கு நக்ஷத்திரம்மாளென்று பெயர்; என் தகப்பனுக்கு என்னிடத்தில் அதிக பக்ஷமாகையால், அவர் இந்த அரண்மனையை எனக்கென்றே கட்டுவித்து, தன்னுடைய அனுமதியில்லாமல் வெளியிலிருந்துவந்து ஒருவரும் உள்ளே புகாமலும், உள்ளே இருப்பவர் வெளியேபோகாமலும் இருப்பதற்காக, இதைச் சுற்றி அநேகங்காததூரம்வரையில் அளவற்ற ராக்ஷதர்களைக் காவல்வைத்திருக்கிறார். என் தந்தைதாய்களைக் கூட நான் பார்ப்பது அருமையாயிருக்கும்படி இந்தக் காவல் அவ்வளவு கொடியதாயிருக்கின்றது. வாஸ்தவத்தில் நான் தாய்தந்தையர்களைப் பார்த்து வெகுநாளாயிற்று. இப்போது அதைச் சொல்வதிற் பயனென்ன? நான் பிறந்தநாள்முதல் ராஜகுமாரர்களை ஒருநாளும் பார்த்ததில்லையாயினும், உன்னைப் பார்க்கும்போதே உன்னிடத்தில் எனக்கு அதிக விருப்பமுண்டாகின்றது. ஆதலால் உனக்கு யாதொரு அபாயமும் உண்டாகாதபடி நானே நேராய் என் தந்தையண்டைபோய் அதற்குத் தக்க ஏற்பாடு செய்துகொண்டுவருகிறேன் என்றுசொல்லி, தான் போய்வருமளவும் அவனை அங்கேயே இருக்கச்செய்து, சிங்காசனத்தினின்றும் எழுந்து தகப்பனண்டைக்குச் சென்றாள்.

தங்களுடைய அருமைமகள் தங்களைப் பார்க்கவருகிறாளென்று கேள்விப்பட்டு அவளுடைய தாய்தந்தையர்கள் இதென்னவென்று அதிசயப்பட்டு, நமது குழந்தை ஏன்வருகிறாள்? என்ன விசேஷமிருக்கும்? ஒருவேளை உடம்பு சௌஸ்தமில்லையோ? அல்லது நாம் கட்டிக்கொடுத்த மாளிகையில் வசிப்பது அவளுக்குச் சவுக்கியமாயில்லையோ என்று சிந்தித்துக்கொண்டிருந்தார்கள். பெண் பக்கத்தில்வரக்கண்டு அவளைப்பார்த்து: குழந்தாய்! நீ இப்போது இங்கே வந்தகாரணமென்ன? ஏதாவது அதிசயமுண்டோ? என்றுகேட்க, அவள்: என் அருமைத்தந்தையே! எனக்குக் கலியாணஞ்செய்துகொள்ளவேண்டுமென்று ஆசையுண்டாயிருக்கிறதென்பதைத் தங்களுக்குத் தெரிவிக்கவேண்டுமென்று வந்தேன்; மிக்கவல்லவனான அழகிய ராஜகுமாரன் ஒருவனைத் தேடிக்கொண்டுவந்து எனக்குக் கலியாணஞ்செய்விக்க வேண்டுமென்றதைக்கேட்டு அந்த

ராக்ஷதராஜன் நகைத்து, குழந்தாய்! நீ இன்னும் வாலிபவயதாயிருக்கிறையே; அப்படியின்றி இப்போதே உனக்கு அதிகமாய் விவாகத்தில் விருப்பமிருக்குமாயின், எவனுவது ஒரு ராஜகுமாரன் இங்கேவந்து உன்னைக் கலியாணஞ்செய்துகொடுக்கும்படி கேட்டால், உன் இஷ்டப்படியே அவசியம் கலியாணஞ்செய்விக்கிறேமென்று சொன்னுன். அதைக்கேட்டு நக்ஷத்திரம்மாள்: மிகத்துணிவுடையவனுன அழகனெருவன், இவ்விடத்தைச்சுற்றி நீ ஏற்படுத்தியிருக்கிற காவல்களையெல்லாம் தன் மனேதைரியத்தால் அலக்ஷியம்செய்துகொண்டு இவ்விடத்துக்கு வருவானுனல், உன் காவலாட்களைக்கொண்டு அவனைச் சின்னபின்னமாய்க் கொல்லச்செய்யாதபடி எனக்காக மன்னித்து அவனைக் காப்பாயா என்றதற்கு, அந்த ராக்ஷதன்: அப்படி ஒருவன் வருவானுனல் அவனுக்கு ஒருநாளும் அபாயமில்லையென்று சொன்னுன்.

நக்ஷத்திரம்மாள் அதைக்கேட்டு மிகவும் சந்தோஷமாய் ஓடி ஜவந்தியம்மாளை அழைத்துக்கொண்டு தாய்தந்தையர்முன் நிறுத்தி, இதோபார்த்தீர்களா? நான் சொன்னபடி மிகவும் அழகாய் ஜவந்திராஜனென்று பேர்பெற்ற ராஜகுமாரன் ஒருவன் வந்திருக்கிறுன் என்றுகாட்ட, அவர்கள் ஜவந்தியம்மாளைப்பார்த்து அளவில்லாத ஆச்சரியமடைந்து, எவராலும் அண்டக்கூடாத இத்தேசத்திற்குள் இவன் எப்படி வந்துசேர்ந்தான்? இந்த அசாத்தியமான காரியத்தை நிறைவேற்றினவனுக்கு எவ்வளவு தைரியமும் சாமர்த்தியமும் இருந்திருக்கவேண்டுமென்று தமக்குத்தாமே நினைத்து மகிழ்ந்தார்கள். இவ்வளவோடுகூட ஜவந்தியம்மாள் நல்ல சவுந்தரியமும் கம்பீரமான தோற்றமுமுடையவளாயிருந்ததனுல், தங்கள் மகளை அவளுக்கே கட்டிக்கொடுக்கவேண்டுமென்று அதிக ஆசையுடையவர்களாய் ஜவந்தியம்மாளைப்பார்த்து: ஓ ஜவந்திராஜனே! நீ எங்களுக்கு மருமகனுகவேண்டுமென்று நாங்கள் ஆவல்கொண்டிருக்கிறேம்; ஏனெனில், நீ மிகவும் நற்குணமுடையவனுய்க் காண்கிறுய்; அதுவுமன்றி, நீ உன் மனையாளுக்காக மிகவும் பயங்கரமான வழியையெல்லாம் கடந்து வெகுதூரம் வந்தையாகையால், உன்னவ்வளவு தைரியசாலி உலகத்தில் இல்லவேயில்லையென்று சொல்லலாம்; ஆதலால் இப்போதே நீ எங்கள் மகளைக் கலியாணம் செய்துகொள்ளவேண்டும். இனி எங்கள் சீமைமுழுதும் உன் ஆதீனந்தான். இப்போது நாங்கள் வைத்துக்கொண்டிருக்கிற பொருள்

களெல்லாம் உன்னுடையவைதாம். எங்களுக்கு மிகவும் அருமையான இப்பெண்ணைமாத்திரம் நீ மிகவும் பத்திரமாய்க் காத்துக்கொள்! எப்போதாவது உனக்காகட்டும் இவளுக்காகட்டும் உங்கள் தேசத்திலிருக்க அனுகூலப்படாமற்போனால், இங்கே வந்துவிடுங்கள்; உங்களுக்கு இஷ்டமானபடி இத்தேசத்தில் சுகமாய் வாழ்ந்துகொண்டிருக்கலாம் என்று சொல்லி அவனை வேண்டிக்கொண்டு கலியாணத்திற்கு ஆரம்பித்தார்கள்.

அந்தக் கலியாணம் அதிக சிறப்பும் களிப்புமாய்ப் பனிரண்டு நாள்வரையில் நடந்தேறிற்று. அந்தக் கலியாண வைபவத்தை நடப்பிக்கவந்த ராக்ஷதர்களுக்குக் கணக்கில்லை. கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு, தென்கிழக்கு, தென்மேற்கு, வடகிழக்கு, வடமேற்கு, ஆகாயம், பாதாளம் என்னும் பத்துத்திக்கிலுமிருந்து ராக்ஷதர்கள் தங்கள் அரசன்மகளுடைய கலியாண மகோற்சவத்தைக் கண்டுகொண்டாட அளவற்ற காணிக்கைகளோடு, ஓயாமல் கூட்டங்கூட்டமாய் வந்துகொண்டேயிருந்தார்கள். யாவரும் வந்து நிறைந்தபிறகு ஒரு திவிய சபாமண்டபத்திலே நாநாதேசத்து ராஜாக்களும்வந்து சூழ்ந்திருக்க ஜவந்தியம்மாளுக்கும் நக்ஷத்திரம்மாளுக்கும் மகா வைபவத்துடனே கலியாணம் நடந்தது.

அந்த ராக்ஷதராஜன் தன் மகளுக்கும் மருமகனுக்கும் கொடுத்த வரிசைகளைக் கணக்கிட்டுச்சொல்ல எவராலும் ஆகாது. அவர்கள் கொடுத்த பூஷணங்கள் கடலிலும் அடங்கமாட்டாதவையாயிருந்தன. அவர்கள் கொடுத்த மரகதம் மாணிக்கம் வைடூரியம் கோமேதகம் புஷ்யராகம் முதலான நவரத்தினங்களுக்கும், பொன் வெள்ளி சாமான்களுக்கும் அளவுசங்கியை இல்லை. தந்த சாமான்களோ எண்ணிறந்தவை; இவற்றையெல்லாம் கணக்கிட்டுச்சொல்ல ஒருவனுக்கு ஆயிரம்வயதிருந்தாலும் போதாது. ராக்ஷதராஜன் இந்தச் சாமான்களையெல்லாம் கொண்டுபோவதற்காகத் தன் மகளுடன் அநேகங்கோடி ராக்ஷதர்களையும், யானை குதிரைமுதலிய அளவற்ற சேனைகளையும் கொடுத்தான். கலியாணம் நிறைவேறின பின்பு கொஞ்சநாள் அவ்விடத்திலேயேயிருந்து பிறகு ஜவந்தியம்மாள் மாமி மாமன்மார்களிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தன் பெண்சாதியோடுகூடத் தன் தேசம்போகப் புறப்பட்டாள். உடனே ஒவ்வொரு ராக்ஷதனும் ஒவ்வொரு மலைபோன்ற மூட்டையைத் தலையிலே தூக்கிக்கொண்டு அவனைப் பின்தொடர்ந்துபோனான்.

அவர்கள் எல்லாரும் அத்தேசத்தைக்கடந்து சிலநாளில் பொன்னிலையும் முத்துப்பழமுமுள்ள வெள்ளி விருக்ஷமொன்றைக் கனவுகண்ட ராஜனுடைய தேசம்போய்ச்சேர்ந்தார்கள். அதனருகே போகையில் ஜவந்தியம்மாள், இவ்வளவு ராக்ஷதசேனையும் தன்னோடுகூடப் பட்டணத்துக்குவந்தால் அதை அடியோடு அழித்துப் புசித்துவிடுமென்று எண்ணி, அந்தச் சேனைகளோடு நக்ஷத்திரம்மாளை அத்தேசத்திற்கு அப்புறமே நிறுத்திவிட்டுத் தான்மாத்திரம் முன் பிரதிஞ்ஞை செய்துவந்தபடியே அந்தப் பட்டணத்திற்குப்போய் அங்கே ஒரு வாரமிருந்தாள். முன் நிச்சயத்திருந்தபடியே அவ்வரசன்மகளுக்கும் ஜவந்தியம்மாளுக்கும் வெகு ஆடம்பரமாய்க் கலியாணம் நிறைவேறிற்று. கலியாணத்தை முடித்துக்கொண்டு ஜவந்தியம்மாள் புறப்படும்போது அவ்வரசன் வேண்டிய ஆடைஆபரணங்களும், பொன் வெள்ளி சாமான்களும், யானை குதிரைமுதலிய சேனைகளும் அளவில்லாமல் சீதனமாய்க் கொடுத்துத் தன் மகளையுங்கூட்டித் தன் தேசத்தெல்லை தாண்டுமளவும் தன் பரிவாரத்துடனே வழிகொண்டுவிட்டு அனுப்பினன்.

அவ்விடம்விட்டுப் புறப்பட்டு ஜவந்தியம்மாள், தான் முன் வாக்குத்தத்தஞ்செய்துவந்த மற்றொரு ராஜனுடைய நகரம்போய்ச்சேர்ந்தாள்: அதாவது, ஒரு ராஜகுமாரத்தியின் சலவைக்கல் நடபாவியைத் தாண்டும்படி நேர்ந்த நகரத்தையடைந்தாள். அங்கேபோய் அவ்வரசன் மகளை அதிக வைபவத்துடனே கைபிடித்துக் கலியாணஞ்செய்துகொண்டு அங்கேயே சிலநாளிருந்து மாமி மாமன்மார்களைக் களிக்கச்செய்து, பின்பு அவர்களிடம் செலவு பெற்றுக்கொண்டு அளவற்ற வரிசைகளோடு அவர்களால் மிகவும் வருந்தி வழிவிடப்பட்டவளாய் அந்நகரம்விட்டுப் புறப்பட்டாள்.

அங்கிருந்து வெகு வேகமாய் ஜவந்தியம்மாள் தன் சேனைகளுடனே, முன் தான் ஒரு அடங்காக்குதிரையை அடக்குவித்த பட்டணம்போய்ச் சேர்ந்து, அப்பட்டணத்தரசன் மகளையும் சொன்னசொல் தவருமல் பாணிக்கிரகணம் செய்துகொண்டு பாட்டு கூத்து முதலிய பலவித வினோதங்களோடு அங்கேயும் சிலநாள் கழித்தாள். இவ்வாருகத் தனக்குக் கிடைத்த மனைவிகள் ஐவரோடும், அதாவது நாகராஜன் மகளாகிய ரத்தினம்மாள், ராக்ஷதராஜன் பெண்ணுகிய நட்சத்திரம்மாள், மற்ற மூன்று ராஜகன்னிகைகள் இவர்களோடும், அளவற்ற பரிஜனங்களோடும், யானை

குதிரை முதலிய சேனைகளோடும் மிகவும் கோலாகலத்துடன் அங்கிருந்து புறப்பட்டுத் தனக்குப் பிராணபிரியையான பார்வதியம்மாளை விட்டுவந்த பட்டணம் நோக்கிச்சென்றாள்.

இப்படி விசேஷவைபவத்துடனே ஜவந்தியம்மாள் தன் யஜமானனான நல்லரசனுடைய நகரத்தருகே போம்போது, அதைப் பார்த்து அப்பட்டணத்து ஜனங்கள் தம்மரசனுக்கு அறிவிக்க, அவன், யாரோ ஒரு பிறதேசத்து அரசன் தன்னுடன் போராடப் படையெடுத்துவருகிறானென்று மிகவும் திகிலடைந்து ஒன்றும் தோன்றாமல் தத்தளித்துக்கொண்டிருந்தான். அச்செய்தி கேள்விப்பட்டு ஜவந்தியம்மாள், யாரோ ஒருவன் வருகிறானென்றெண்ணித் தாங்கள் அஞ்சி நடுங்கவேண்டாம்; தங்கள் கட்டளையினால் ராக்ஷதன் சீமைக்குச் சென்றிருந்த சேவகனாகிய ஜவந்திராஜன் போனகாரியத்தை முடித்துக்கொண்டு திரும்பிவருகிறான் என்றுசொல்லி, வாயுவேகம் மனோவேகமாய்ப் பறந்தோடத்தக்க ஒரு குதிரையின்மேல் வெகு துரிதமாய்ச் செய்தியனுப்பினாள். அதைக்கேட்டு அந்த ராஜன் பயமடங்கி அதிக சந்தோஷமடைந்தவனாய், மங்களவாத்தியம் முழங்கச்செய்து உடனே தன் ஆடம்பரங்களோடுகூடப் புறப்பட்டு எதிர்கொண்டுவந்து, மகா வைபவத்துடனே அவளை அழைத்துக்கொண்டு பட்டணம்சேர்ந்தான். பட்டணம்போய்ச் சேர்ந்ததும் ஜவந்தியம்மாள், அந்த ராஜாவைப்பார்த்து மகாப்பிரபுவே! மகாராணியாருக்காகப் பொன்னுடை கொண்டுவரும்படி ராக்ஷதர்சீமைக்கு தாஸனைச் செல்லவிட்டீர்களல்லவா? அப்படியே இதோ கொண்டுவந்து சேர்ந்தேன் என்றுசொல்லி ஐந்து ராக்ஷதன் தலையிலிருந்த மூட்டைகளை அவ்வரசனுக்கும், இரண்டு மூட்டைகளை மந்திரிக்குங்கொடுத்தாள். அம்மூட்டை ஒவ்வொன்றிலுமிருந்த மிகச் சிறந்த பீதாம்பரங்களும், ஆபரணங்களும், பொன் வெள்ளி ரத்தினம் முதலியவைகளும் ஒவ்வொரு பெரியமாளிகையிலும் அடங்காதவையாயிருந்தன.

அந்தப் பட்டணம்போய்ச் சேர்ந்தபிறகு ஜவந்தியம்மாள், தன்னுடன்வந்த சேனைகளெல்லாம் அத்தேசத்திலேயே இருக்குமானால், சிலநாளில் பெரும்பஞ்சம் விளையுமென்று எண்ணி அவரவர்களுக்கு வேண்டியபடி வெகுமானஞ்செய்து அவரவர் தேசத்திற்கு அனுப்பினாள். தன் மனைவிகளாகத் தான் கொண்டுவந்த ஐந்து பெண்மணிகளுள், மூன்று ராஜகுமாரத்திகளைமாத்திரம்

தன்னோடுகூடத் தன் வீட்டிலேயே பார்வதியம்மாளைப்போல வாழும்படி வைத்துக்கொண்டு, சர்ப்பராஜன்மகளும் ராக்ஷதராஜன்மகளுமாகிய மற்ற இருவரும் மேலான அந்தஸ்தும் அழகும் உடையவர்களாகையால் அவர்களைத் தன்னுடன் வைத்துக்கொண்டிருப்பது தகுதியல்லவென்று, அவர்களுக்காக நடுக்காட்டிலே அற்புதமான அரமனையொன்று கட்டுவித்து அதிலே அவர்களை வாசமாயிருக்கச்செய்தாள். இந்தச் செய்தி ஜவந்தியம்மாள் தவிர மற்றெவர்க்கும் தெரியாது.

இப்படியிருக்க ஒருநாள் அந்த ராஜாவின் சிறுபெண் ஒருத்தி, ஜவந்தியம்மாளின் பெருமையைப்பார்த்து அதிசயித்துத் தகப்பனண்டைபோய், என் அருமைத்தந்தையே! இந்த ஜவந்திராஜனவ்வளவு தைரியமும் சாமர்த்தியமும் அழகுமுள்ள புருஷன் வேறொருவனும் இவ்வுலகத்திலிருப்பதாய் என் புத்திக்குத் தோன்றவில்லை. இப்படிப்பட்ட மகா புருஷனுக்கு அல்லாமல் பின் யாருக்கு நான் மணமாலை சூட்டுவேன்? இவனையே கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று எனக்கு அதிக விருப்பமாயிருக்கிறது என்று சொன்னதற்கு, அவன்: குழந்தாய்! நீ இவனைக் கலியாணஞ் செய்துகொள்ள விருப்பங்கொண்டதைப்பார்த்து எனக்கு வெகு சந்தோஷமாயிற்று என்று சொல்லி ஜவந்தியம்மாளை வரவழைத்து அதை அப்படியே நிச்சயம்பண்ணினான். அதற்கு ஜவந்தியம்மாள் சொன்னதாவது: மகாப்பிரபுவே! தங்களுடைய மகளை மணம்புரிந்துகொள்ளும்படியான பாக்கியம் அடியேனுக்குக் கிடைக்கத்தக்கதா? தங்கள் கட்டளைப்படி நடக்கச் சித்தமாயிருக்கிறேன். ஆனால் ஒன்று; இப்போது நாம் செய்யப்போகிற கலியாணம் மிகவும் சிறப்புற்றிருக்கவேண்டும்; ஆதலால் எல்லாத் தேசத்து அரசர்களுக்கும் பிரபுக்களுக்கும் செய்தி அனுப்பி அவர்களை வரவழைக்கும்படி எனக்குக் கொஞ்சகாலம் அவகாசம் தரவேண்டுமென்று கேட்க, அவன் அப்படியே ஆகட்டுமென்று ஒப்புக்கொண்டான்.

அச்சமயத்தில் ஒருநாள் பார்வதியம்மாள் முகம்வாடிக் கண்ணீர் விட்டுக்கொண்டிருக்கக்கண்டு, ஜவந்தியம்மாள்: தோழி! ஏன் இன்றையதினம் நீ இப்படி விசனப்பட்டுக்கொண்டிருக்கிறாய்? உனக்கு ஏதாவது குறையுண்டோ என்று கேட்க, அவள்: என் தாயே! எனக்கு ஒரு குறையும் உண்டாகவொட்டாமல், நீ எல்லா வருத்

தங்களையும் நீக்கி நமக்கு நிகரில்லாத பெருமையையும் பாக்கியத்தையும் சம்பாதித்தாய்; ஆயினும் எனக்குச் சந்தோஷமுண்டாகவில்லை; நம்முடைய நாயகன் நினைவு என் மனதைவிட்டு அருவிக்கொண்டே எப்போதும் நீங்காமலேயிருக்கிறது. எள்ளளவும் ஆதாரவற்று அவர் கட்டக்கந்தையும் குடிக்கக்கூழுமில்லாமல் பிச்சாண்டியாய் எங்கே அல்லாடுகிறாரோ? என்னவருத்தப்படுகிறாரோ? எப்படியாவது அவரை ஒருதரம் பார்க்கவேண்டுமென்று என் மனம் பதைக்கின்றது என்று சொல்லியழுதாள். அதைக்கேட்டு ஜவந்தியம்மாள்: நல்லது, அப்படியே ஆகட்டும்; விசனப்படாதே, மனதை உறுதிப்படுத்திக்கொண்டிரு; என்னை ஜவந்திராஜனல்லவென்று இந்தப் பெண்பிள்ளைகள் யாராவது இந்தவேளையில் கண்டுகொள்ளப்போகிறார்கள்! எச்சரிக்கையாய்ப் பொறுத்திரு; நான் நம்ம நாயகனைக் கண்டுபிடிக்கும்படிக் கூடியவரையில் முயல்கிறேன் என்று சொல்லி அவளைச் சமாதானப்படுத்திவிட்டு, ரத்தினம்மாளைப் பார்த்துப் பேசவேண்டுமென்று காட்டுமாளிகைக்குப்போனாள். அங்கேபோய் மிகுந்த யுக்தியோசனையும் வல்லமையுமுடையவளான ரத்தினம்மாளைப் பார்த்து: என் கண்மணியே! எனக்கு ஒரு தோழனுண்டு; அவன் பனிரண்டுவருஷத்திற்குமுன்னே பைத்தியம் பிடித்துப் பிச்சாண்டிவேடம்பூண்டு போனஇடந்தெரியாமல் ஓடிப்போயினான். பின்பு அவன் எவ்விதமானானோ தெரியாது; அவன் இன்னும் உயிரோடு இருப்பானானால் அவனைக் கண்டுபிடிக்கவேண்டுமென்று அதிக அபேக்ஷையாயிருக்கின்றது; அதற்கு வழி எப்படியென்று கேட்க, ரத்தினம்மாள் நல்ல புத்திகூர்மையுடையவளாகையால் நன்றாய்த் தீர ஆலோசித்துச் சொன்னதாவது: அவனைக் கண்டுபிடிப்பதற்காக நீ செய்யவேண்டிய சிறந்த உபாயம் என்னவெனில், ஏழைப்பரதேசிகளைப் போஷிப்பதற்காகப் பெரிய அன்னசத்திரம் ஒன்று கட்டுவித்து, 'இன்னவிடத்தில் சகலமான பரதேசிகளுக்கும் அவரவர் இஷ்டப்படி வேண்டுமளவு தருமத்திற்குச் சாப்பாடு போடப்படும்' என்று சீமைமுழுதும் அறிக்கைசெய்யவேண்டும். அப்படிச் செய்வாயானால், அங்கங்கிருந்து அநேகம் எளியவர்கள் வந்து கூடுவார்கள். அவர்களோடு ஒருவேளை உன் நேசனும் வந்தாலும் வருவான் என்று சொன்னாள்.

(இன்னும் வரும்.)

பிரபல ஜாலங்கள்.

சாதாரணமாய்க் கண்ணுக்குத் தோற்றுவதெல்லாம் உண்மையென்று நினைப்பது உலகவழக்கம். அப்படியே அநேகர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆயினும் நாம் பார்ப்பதெல்லாம் உண்மையென்று எண்ணுவது மிகவும் பிசகானது. அநேகவிஷயங்கள் பார்வைக்கு மெய்போலக் காணப்படுகின்றன. ஆய்ந்துபார்த்தால் முழுதும் மாறாக இருக்கின்றன. அறியாமையும் தூரபிமானமும் கெட்டவழக்கமுமே இவ்வகையான பல பெருத்த பிழைகளுக்குக் காரணமாகின்றன. ஒரு திருஷ்டாந்தம் பாருங்கள்: சூரியன் உதயமாகிறான், அஸ்தமிக்கிறான் என்று சொல்லுகிறோம். சூரியன் உதிப்பதுபோலவும் அஸ்தமிப்பதுபோலவும் நமது கண்ணுக்குத் தோற்றுவதனால் அப்படியே அநேகர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். வாஸ்தவத்தில் சூரியன் உதிப்பதுமில்லை, அஸ்தமிப்பதுமில்லை. அவன் நின்றவிடத்திலேதான் நிற்கிறான். ஆயின் சூரியன் உதயமாவதுபோலவும் அஸ்தமிப்பதுபோலவும் தோன்றுவதேனெனில், ஒரு விளக்குக்கு நேராய் ஒருபழம் உருண்டால் எப்படியோ அப்படிப் பூமி சூரியனுக்கு நேராக உருள்வதனால் அப்படியாகின்றது. இப்படியே ஒரு செப்படிவித்தைக்காரன் வெறுங்கையைக் காட்டிவிட்டுப் பிறகு அந்தக் கையிலேயே பல விதமான பொருள்களிருக்கக் காட்டுகிறான். அவன் தன் விரலிடுக்குகளிலோ பைக்குள்ளேயோ எங்கேயோ ஓரிடத்தில் ஒளித்துவைத்துக்கொண்டிருப்பதை எடுப்பது ஒருவர்க்கும் தெரிகிறதில்லை. நமது கண்ணை மயக்கி வெளிக்கு உண்மைபோலத் தோற்றுவிக்கிற மாயைகள் இப்படி அநேகமுண்டு. அவற்றை நன்றாய் நிதானிக்கத்தக்க புத்திகூர்மையும் பரிசோதிக்குந் திறமையும் இல்லாமையால் அவையெல்லாம் உண்மையென்று நம்ப இடமுண்டாகின்றது. முற்காலத்தில் மதியைமயக்கத்தக்க மாயங்களும் மோசங்களும் உலகத்தில் எண்ணிறந்தவைகளாய்க் கிடந்தன. அவற்றை அநேகர் நம்பியுமிருந்தார்கள். அக்காலத்தில் சூன்னியக்காரிகளென்றுசொல்லித் திரிந்துகொண்டிருந்த அநேகம் பெண்பிள்ளைகளை நியாயாதிகாரிகள் விசாரித்துக் கொடியதண்டனையும் விதித்திருக்கிறார்கள். அப்படித் தண்டித்ததற்குச் சரியான காரணம் ஒன்றுமில்லை. அதன் காரணங்களைக் கேட்டால் அவையெல்லாம் இப்போது யாவரும் பரிகாசம்பண்ணத்தக்கவைகளாகும். இக்காலத்தவர்கள் இத்தன்மையான மோசங்களை அதிகமாய் நம்புகிறதில்லை, இவ்வகைச் செய்கைகளெல்லாம் வஞ்சகமானவையென்னும் எண்ணம் இப்போதுதான் கொஞ்சங்கொஞ்சமாய் மனதில் பதிந்துகொ

ண்டுவருகிறது. இப்போதிய மனிதர்கள் நன்ருய் ஆய்ந்தோய்ந்து பாராமல் ஒன்றையும் சத்தியமாக நம்புகிறதில்லை. நாகரிகமும் அநுபவமும் மேலிட்டிருக்கும் இக்காலத்திலேகூடச் சிலர் ஒவ்வொருவேளை மதிமயங்கி வஞ்சிக்கப்படுகிருர்கள். ஏனெனில், இவ்வுலகத்தவர்களுள் அநேகர் சாதாரணமான படிப்புடையவர்கள்; கண்டதையெல்லாம் உண்மையென்று நம்புகிற தன்மையுடையவர்கள்; அப்படிப்பட்டவர்களெல்லாம் புதிதாய் ஏதாவது ஒரு விநோதத்தைக் காண்பதில் குதூகலமுடையவர்களாய் எவ்வளவு அற்பமாயிருந்தாலும் தம் புத்திக்கு ஒரு வியப்பாய்த் தோன்றுவதையெல்லாம் உண்மையென்று நம்புகிருர்கள். ஆயினும் நாம் அதை அவர்கள்மேல் ஒரு குற்றமாகக் கொள்ளக்கூடாது. சாஸ்திரங்களால் வெளிப்படுத்தப்படாத அதிசயங்களும் சில உலகத்திலிருக்கக்கூடுமாகையால், ஒரு பொருள் இன்னதென்று நமக்குத் தெரியாமற்போனமாத்திரத்திலேயே, இது மாயத்தின் காரியமென்று நாம் சாதிக்கத் துணியக்கூடாது. அதிசயமாய்த் தோன்றுகிற ஒவ்வொரு செய்கையையும் நாம் பக்ஷபாதமில்லாமல் நடுநிலையாய் ஆராய்ந்தறியவேண்டும். ஆயினும் அதிலுள்ள தீமையென்னவெனில், அப்படிப்பட்ட சந்தேக விஷயங்களைச் சாஸ்திரப்பொருள்களைக்கொண்டு நாம் செம்மையாய்ப் பரிசோதிப்பதற்குமுன்னமே வேறுவிதமான எண்ணங்கள் மனதிற்குள்ளே புகுந்துகொள்கின்றன. மனவுறுதியில்லாத அநேகர் அவற்றிற்குச் சுலபமாய் இடங்கொடுத்துக் கடைசியில் அவற்றிற்கு அதீனமாகி, மிக்கஆலோசனையும் மனவுறுதியுமுடையவர்களால் புத்தியில்லாதவர்களென்று இகழப்படுவார்கள். கடினமாயினும் வருத்தப்பட்டு அப்படிப்பட்ட மாயைகளுக்குள் அகப்படாமல் பத்திரமாய் நடப்பார்களானுல் மிக்க நலமாயிருக்கும். நல்ல நிலைமையிலிருப்பவர்கள் இப்படிப்பட்ட மாயச்செயல்களை நன்ருய்ப் பரிசோதித்துப்பாராமல் நம்புவார்களானுல் அதன் பயனை அநுபவியாமற்போகார்கள்.

டாக்டர் கார்பேண்டர் என்பவர், இந்த மாயைகளைப்பற்றிய செய்கைகளெல்லாம் செம்மையாய் விளங்கும்படியாகச் சிறந்த புத்தகமொன்று எழுதியிருக்கிருர். அவர் அந்தப் புத்தகத்தில் ‘மாயையாகிய பெருத்த தொடர்வியாதி ஒன்றின்பின் ஒன்ருய் உற்பவித்து நாளளவில் முழுதும் பரந்துபோயிற்று; அதன் முக்கியமான தன்மை ஒன்ருயிருந்தாலும், உருவம்மாத்திரம் அந்தந்தக் காலத்திற்குத் தக்கபடி வெவ்வேருக மாறிக்கொண்டிருக்கின்றது. அற்புதமான ஒரு செய்கையைக் கண்டால் அதை அவ்வாறே கிரகித்துக்கொள்வது சிற்சில மனதிற்கு இயற்கையாயிருக்கின்றது. அதனுல் இப்படிப்பட்ட பலவிதமான செய்கைகள் ஒவ்வொருவரிடத்தில் காணப்படுகின்றன’ என்று சொல்லியிருக்கிருர்.

இவ்வகைக் காரணங்களால், மேஸ்மேரிஸம், ஸ்பிரிசுயலிஸம், டேபில் டர்னிங் என்று சொல்லப்பட்ட பலவித ஜாலவித்தைகள் சீமையில் ஏற்பட்டிருக்கின்றன. அவையெல்லாம் மதிமயக்கத்தாலுண்டான ஒருவகைப் பைத்தியமேயொழிய வேறொன்றுமல்ல. சிலருடைய மனதில் ஒவ்வொருவகைப் பேதமையான எண்ணமுண்டாகின்றது. அந்த எண்ணத்தை மாற்றும்படியாக என்ன நியாயம் எடுத்து உரைத்தாலும் அதை அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. உனக்கேன் இப்படிப்பட்ட எண்ணமுண்டாயிற்று என்று கேட்ட மாத்திரத்திலே அவர்கள் பெருங்கோபங்கொள்வார்கள். சாதாரணமாய்ப் பேதமைக்குணமே எங்கும் அதிகமாய்ப் பரவுகின்றன. அந்தக் குணத்திற்கு ஒருவன் எவ்வளவு வசப்படுகிறானோ அவ்வளவுக்கவ்வளவு மாயங்கள் உறுதிப்படுகின்றன. மதசம்பந்தமான விஷயங்களைப்பற்றி முற்காலத்திலும் இக்காலத்திலும் சிலர்க்கு உடம்பு தெரியாமல் கோபாவேசமுண்டாகக் கண்டிருக்கிறோம். அந்தக் கோபந்தணிந்தபிறகு அவர்களுக்கே அது வெட்கப்படுவதற்குக் காரணமாகின்றது. இப்படி உலகத்தில் மனிதர்களுடைய மனதை மயக்கக் காரணங்கள் அநேகமுண்டு. அவற்றால் மனிதர்கள் கவரப்பட்டிருக்கக்கண்டால் மிகவும் பரிதாபமாயிருக்கும்.

மிக்க சமர்த்தர்களான மேன்மைபெற்ற பெரியோர்கள்கூட இவ்வகை ஜாலங்களுக்கு உட்பட்டுத் தம்மைச் சார்ந்தவர்களையும் அதேவிதமாய் நடத்துவிக்கிறார்கள். சுமார் நாற்பதுவருஷகாலமாய் மேற்சொன்ன மெஸ்மெரிஸம் முதலிய ஜாலவித்தைகள் விசேஷமாய் நடந்தேறுகின்றன. மெஸ்மெரிஸம் என்பது யோகநித்திரையென்று ஒருவாறு சொல்லலாம். அதாவது திடீரென்று ஒருவனை மதிமயங்கித் தூங்கச்செய்வது, பேசவொட்டாமல் வாயடைப்பது முதலிய பல மாயங்களாம். பல சாஸ்திரங்களும் தத்துவங்களும் கண்டறிந்த பண்டிதர்கள்கூட அநேகர் அற்புதங்களைக்காணஆவல்கொண்டு இவ்வகை ஜாலங்களை உண்மையாக நம்புகிறார்கள். முற்காலத்தில் நமது தேசத்தில் மாயச்செயல்கள் அநேகம் நடந்துவந்தன. அவற்றுள் இந்திரஜாலம் மஹேந்திரஜாலம் என்பவை மிகவும் முக்கியமானவை. இந்த ஜாலவித்தைகளால் அநேகம் மாயக்காரர்கள் முற்காலத்தில் பல அற்புதங்களைக் காட்டினதாகக் கேட்டிருக்கிறோம். ஒருநாளும் நாம் காணாத காட்சிகளை அவர்கள் காட்டுவார்கள்; திடீரென்று சபையிலுள்ளோர் அனைவரையும் மதிமயங்கித் தூங்கச்செய்வார்கள்; வாயைத்திறந்து பேசவொட்டாமல் ஊமையாக்கிவிடுவார்கள். திடீரென்று பேரிருள் சூழ்ந்துகொள்வதுபோலவும், பெருஞ்சண்டைகள் நடப்பதுபோலவும், நாகங்கள் அநேகந்தோன்றி நாலாமூலையிலும் படருவதுபோலவும், அவற்றை அநேகங் கழுகுகள்வந்து கொத்திக்கொண்டு வானத்தில் பரவுவதுபோலவும் இப்படி அநேகவிதமான அற்புதங்களைக்

காட்டுவார்கள். காளிதாசமகாகவி மாளவிகாக்கினிமித்திரம் என்னும் நாடகத்திலும், தண்டிமகாகவி தசகுமாரசரிதம் என்னும் சரித்திரத்திலும் இந்திரஜாலவித்தையின் அதிசயத்தை நன்ருக விளக்கிக் காட்டியிருக்கிருர்கள். இந்த மாயவித்தைகள் முற்காலத்திலும் ஐரோப்பியர்க்கு ஒருவகைப் போதுபோக்காயிருந்தன. அக்காலத்தவர்கள் இந்த வித்தைகள் செய்ததெல்லாம் கைக்குறிகளாலும் கண்பார்வைகளாலுமேயொழிய வேறல்ல. அந்த ஆட்டக்காரன் ஆட்டுவிக்கிறவனை நியாயமான காரணமொன்றுமில்லாமலே ஏதோ தந்திரஞ்செய்து மதிமயங்கப்பண்ணுகிருன். மனவுறுதியில்லாதவர்கள் அதற்கு வசமாகிருர்கள். மனவுறுதியுடையவர்கள் ஒருபோதும் வசப்படுவதில்லை.

இப்படிப் பலவிதமாய்ஜனங்களுக்குச் சந்தோஷமும் மதிமயக்கமும் உண்டாக்குகின்ற ஜாலவித்தைகளெல்லாம் அஸ்தலாகவங்களாலும், பலவகைப் பார்வைகளாலுமே முக்கியமாய் நடத்தப்படுகின்றன. இவைதவிர அவற்றுள் வேருெரு அதிசயமுமில்லை. அவற்றின் நுட்பத்தை நாம் கண்டறிவோமாஞல் பிறகு அதில் யாதொரு புதுமையும் நமக்குத் தோன்ருது. மேலும் மனிதர்களுக்கு தேஹஸ்மரணையில்லாமல் மதிமயக்கமுண்டாக்கத்தக்க மருந்துகளும் சில உண்டு. அம்மருந்துகளைக்கொண்டு வித்தைகாட்டுவதில் ஜாலம் ஒன்றுங் கிடையாது. ஒருவனுடைய நாசிநுனியில் ஒருவகைக் குச்சியை வைத்து அதையே அவனைக் கொஞ்சநேரம் உற்றுப் பார்த்துக்கொண்டிருக்கும்படிச் செய்தால் அவன் உடனே மயங்கிப்போகிருனென்று ஒருவர் சொல்லியிருக்கிருர். அப்படிச் செய்வதஞல் ரத்தநாடிகள் ஒருவிதமாய்ச் சுருங்குகின்றனவாகையால் அப்படியாகின்றது. சதாரணமாய் நித்திரைவராதவர்கள் கூட நாசியின் கீழ்நுனியை அசைக்காமல் நிலையாக வைத்துக்கொண்டு கொஞ்சநேரம் அதேகவனமாய் மூச்சுவிடும்படி செய்தால் உடனே நித்திரைகொள்வார்கள். தூக்கம் வராமல் தவிக்கிறவர்களுக்கு அநேகவிடங்களில் இதேமருந்து செய்துவருகிருர்களாம்.

இப்படி விநோதத்திற்காகச் செய்கிற பல ஜாலவித்தைகள் மாத்திரமேயன்றி, ஞானதிருஷ்டியென்று சொல்லி ஒரு புதுமை காட்டுகிருர்கள். அதாவது: அதற்குரிய ஏற்பாட்டின்படி ஒருவனுக்கு ஞானதிருஷ்டியுண்டாக்கிப் பின்பு அவனைக்கொண்டு எந்தச்செய்தியும் எளிதாகத் தெரிந்துகொள்ளலாம்; எதைக் கேட்டாலும் அவன் பிரத்தியக்ஷமாய்ப் பார்த்ததுபோல் தெளிவாய்ச் சொல்லுவான் என்கிருர்கள். இந்த வித்தையிலுள்ள சூதுகளை ஒருவர் எடுத்துத் தெளிவாய்ச் சொல்லியிருக்கிருர். இந்த திருஷ்டிவித்தையினுல் அநேகர் அநேகம் குறிகள் சொல்லிக் கொண்டிருக்கிருர்கள். இப்படியிருக்கக் கொஞ்சநாளைக்குமுன்னே

சீமையில் ஒரு சீமாட்டி இந்த ஞானதிருஷ்டியாற்செய்யும் அற்புதங்களில் அதிக நம்பிக்கையுடையவளாய் அதைப் பார்க்கவேண்டுமென்று தன்னண்டையிருந்த தாதியொருத்திக்கு அந்த ஞானதிருஷ்டிமந்திரத்தை ஏற்றுவித்து அடிக்கடி அதிசயங்களைப்பார்த்து ஆனந்தித்துக்கொண்டிருந்தாள். இப்படியிருக்க ஒரு சமயத்தில் அந்தத் தாதி ஞானதிருஷ்டிகொண்டு, அவளுடைய பந்துக்களுள் ஒருவன் ஏறிப்போயிருந்த கப்பலொன்று கடலில் உடைந்து போனதாயும், அது உடைகிறதற்குமுன்னமே ஒரு சிறுவன் கப்பலிலிருந்து கடலில் வீழ்ந்து இறந்ததாயும் இச்செய்திகளைக் கண்டறிந்து சொன்னாள். அதைக்கேட்டு அவள் எஜமானி, இவள் சொன்னசெய்தி உண்மைதான்; முன்னதாய் யாராவது சொல்லக்கேட்டிருப்பாள் என்றாலோ அதுவுமில்லை. இந்த வினோதஞ்செய்து முடிக்கப்போகிற தருணத்திலேதான் அவள் சிற்றம்மை இச்செய்தியை வீட்டிலேவந்து சொன்னாள். ஆதலால் இவள் சொன்னது ஞானதிருஷ்டியாலேதான் என்றாள். அவள் சொன்னது உண்மைதானென்று மற்றவர்களும் அதை அப்படியே நம்பினார்கள். மற்றொருநாள் அப்படியே அவள் மோகங்கொண்டிருக்கையில், போனதடவை நீ சொன்ன செய்தி யாராவது ஒருவர் சொல்லக்கேட்டுச் சொன்னதா, நீயே கண்டறிந்து சொன்னதா என்று கேட்டதற்கு அந்தப் பெண், அப்படிப்பட்டதொன்றுமில்லை; நானேபோய் இச்செய்தியெல்லாம் நேராய்ப் பார்த்துவந்தேன் என்றாள். இதையும் உண்மையென்று அநேகர் நம்பினார்கள். கடைசியில் இவையெல்லாம் வஞ்சகப்பேச்சாய் முடிந்தன. இதன் உண்மையைக் கண்டறிய மிக்கஆவல்கொண்டு ஒருவர் எல்லாவற்றையும் பூராயமாய் விசாரித்தார். விசாரித்ததில் இச்செய்தியையெல்லாம் அவள் சிற்றம்மை ஒருயாமத்திற்குமுன்னமே அவள் வீட்டில் சொல்லுவித்திருந்ததாகத் தெளிவாய்த் தெரியவந்தது. அதன் பிறகு ஞானதிருஷ்டிக்காரியென்று அவளுக்கிருந்த பெருமைபோய் அவள் மானபங்கப்பட்டதுமன்றியில் அந்த வித்தைக்கிருந்த பெருமையும் அவ்விடத்தில் இதனோடு அழிந்துபோயிற்று. அறிவிற்சிறந்த பெரியோர்களெல்லாம் இவ்விதமாய் ஏமாந்துபோம்படியிருக்க, ஒன்றுமறியாத பேதைகளுக்கென்னசொல்லுகிறது!

இப்படிப் பார்வைக்கு அற்புதமாய்த் தோன்றுகிற வினோதக்காட்சிகளையெல்லாம், தகுந்த திருஷ்டாந்தமொன்றுமில்லாமலே தங்கள் புத்தியையே முக்கியமாய்க்கொண்டு, உண்மையென்று நம்பும்படி அநேகர்க்கு ஒருவகைத் தீர்மானமுண்டாவதற்குக் காரணம் யாதென்று விசாரிக்கப்புகில் வெகுதூரம் வளரும். முதலில் இவற்றை நம்பிப் பிறகு ஏமாந்துபோன அநேகர் இதன் நுட்பங்களை நன்றாய்த் தெரிவித்திருக்கிறார்கள். ஒன்றைப்பார்க்கும்போதே சரிதானென்று அதை அங்கீகரித்துக்கொள்வதனால் இவ்வகைத்

தீமைகள் உண்டாகின்றன. இப்படி ஒரு பலகையின்மேல் பெவிலேவைத்தால் அது நம்மனோரதங்களைத்தானே எழுதிக்காட்டு கிறதென்று ஒருவகைப்புதுமை ஒருகாலத்தில் உண்டாயிற்று. இந்த ஜாலவித்தைகளெல்லாம் பிரமிப்பவர்களைக் கண்ணைக்கட்டிப் பெ ரும்பொருள்தேடப் பெருத்த வர்த்தகமாயிருந்ததனால், அதைச் செய்பவர்கள் தங்கள் சூது ஒரு விஷயத்தில் வெளிப்படுமானால் அதை மற்றொருவிதமாக மாற்றிக்கொள்வார்கள். இப்படி வெகு காலம் ஐரோப்பாவில் ஜாலவித்தைகள் விசேஷித்து அநேகரை வஞ் சித்துக்கொண்டிருந்தன. இப்போதும் அவை ஒழிந்துபோகவில்லை. ஆயினும் அவற்றில் அற்புதங்கள் ஒன்றுமில்லை, எல்லாம் மோசச் செயல்களென்றும் அந்தந்தக்காலத்தில் ஒவ்வொரு விவேகிகள் ஏற்பட்டு அவற்றை வெளிப்படையாய்க் காட்டிவிட்டார்கள்; ஆத லால் இப்போது அவ்வளவு மும்மரமில்லை. எது எப்படியிருந்தா லும் மனிதர்களுடைய மனது நிலையற்றதாகையால், யார் எதைப் பார்த்தாலும் முதலில் அதின் வாஸ்தவம் இத்தன்மையதென்ப தைத் தீர ஆலோசியாமல், அதைப்பற்றி ஒன்றும் செய்ய எத்த னிக்கக்கூடாது.

கதவுசாத்து.

பெரியோர்கள் எக்காலத்திலும் எவ்விடத்திலும் எந்தக்காரி யஞ்செய்தாலும், எந்தப்பேச்சு பேசினாலும் அப்பப்போது வாய்க் கிற தருணங்களில் சிறுவர்களுக்குச் சிற்சிலவாய் இயன்றமட்டும் நீதிகளைக் கற்பிப்பதிலேயே கண்ணாயிருப்பார்கள். இப்படிச்செ ய்து சிறுவர்களைக் காக்காத பெரியோர்கள் அவர்களுக்குப் பகை வர்களேயன்றி வேறல்ல. பிள்ளைகளுக்கு எளிதிலேயே நீதி கற்பிக் கும்விதம் இத்தன்மையதென்று அடியில் குறிக்கிற சம்பாஷணை யால் தெளிவாய்த் தெரியவரும்.

மாரிகாலத்தில் ஒருநாள் ஒரு கிழவன் தன் வீட்டு நடைத்திண் ணையில் உட்காந்திருந்தான். அப்போது சில்லென்று குளிர்ந்து கீழ் காற்று வீசவே, அவன் அந்தக் குளிரைத் தாளமாட்டாமல் அண் டையிலிருந்த தன் பேரப்பிள்ளையை அழைத்து: குழந்தாய்! கத வைச்சாத்தென்றான். அம்மகன் அதைக் கவனியாமல் விளையாட் டுத்தனத்தால் பராக்காயிருக்கவே, பாட்டன் மறுபடியும் பேரனைக் கூவி. அப்பா! கதவைமூடு என்றான். அச்சிறுவன் அதையும் கவ னியாமல் எங்கேயோ ஒரு மூலையாய்ப்பார்த்து நிற்கவே, கிழ வன் அவனைக் கொஞ்சம் அதட்டியழைத்து: அடா! கதவை மூடென்று நான் பலதரம் சொல்லுகிறேன்; நீ எங்கேயோ பார்த்து

நிற்கிறையே; எனக்குக் குளிரால் உடம்பு நடுங்குகிறதே என்முன்.
அதன்மேல் நடந்த சம்பாஷணையாவது:

பேரன்: ஐயா! நான் விளையாட்டுப் புத்தியால் தங்கள் பேச்சைக் கவனியாமற்போனது பிசகுதான். இப்போதுமாத்திரம் பொறுத்துக்கொள்ளுங்கள்; இனிச் சரியாய் நடக்கிறேன்.

பாட்டன்: குழந்தாய்! நான் இப்போது என்னவோ சொல்லுகிறேனென்று என்னிடத்தில் நீ கோபங்கொள்ளாதே. இப்போது நான் சொன்னபேச்சு உனக்கு ஒரு நற்புத்தி போதிக்கின்றது. நீ உன் வாழ்நாளில் பிறருடைய சவுக்கியத்தையே பெரிதாய்ப் பார்த்து வரும்படியாகக் கற்கவேண்டும். இதுமாத்திரமேயல்ல, இந்தச் சிறு விஷயத்திற்குச் சொன்ன செய்தி இன்னும் பெருத்த பலவிஷயங்களுக்குக்கூட மிகவும் உபயோகமாகும். இந்த வீட்டுவாயிற் கதவுமாத்திரமேயல்லாமல், நீ பத்திரமாய்த் திறவாமல் மூடிவைக்க வேண்டிய வேறு சில கதவுகளுண்டு.

பே. அவை எவ்வகைக் கதவுகள் ஐயா?

பா. ஒருநிமிஷம் இங்கே உட்கார்; அவற்றுள் சிலவற்றை உனக்கு எடுத்துச்சொல்லுகிறேன்.

"திட்டு முதலிய கெட்டபேச்சுகளும், துட்டச்சிறுவர்களுடைய துராலோசனைகளும் உள்ளே வந்து புகாதபடி உன் காதுகளின் கதவைக் கவனமாய் மூடிவைக்கவேண்டும்; இல்லாவிட்டால் நீ சுகப்படமாட்டாய். எப்போதாவது ஒருதடவை கொஞ்சம் அஜாக்கிரதையாய் உன் காதில் அவற்றிற்கு இடங்கொடுப்பாயானுல் பின்பு அவை ஒருபோதும் வெளியேபோகாமல் இன்னும் தன் நேசர்களையும் அநேகமாய் உள்ளே வரவழைத்துக்கொள்ளும்.

"இப்படியே உன் கண்களின் கதவுகளைப்பற்றியும் நீ கொஞ்சம் கவனமாயிருக்கவேண்டும். கெட்டவிஷயங்கள் வீண்கதைகள் முதலியவை அடங்கிய புத்தகங்களைப் பார்க்கக்கூடாது. அவைகளைப் பார்க்கத்தலைப்பட்டால் அவசியமான படிப்பில் ஆதரவு குறைந்து கடைசியில் மூடனுய் ஒன்றுக்கும் உதவாமற்போவாய். மேலும் கெட்டகாட்சிகளைப் பாராமல் கண்ணைமூடிக்கொள்ளவேண்டும்; இல்லாவிட்டால் விவேகமற்று அழிந்துபோவாய். இவை மாத்திரமேயன்றி, விற்பனைக்காகக் கடைத்தெருவில் பரப்பிவைத்திருக்கும் அற்புதப்பொருள்களிடத்தில் அதிகமாய்க் கண்ணைத் திறந்துவிடக்கூடாது. அப்படிச் செய்தால் கையில் ஒருதுட்டு சேர்க்கவேண்டியவழியும் இன்னதென்று தெரியாமற்போம்; பஞ்சை பாதேசிகளுக்குப் பொருள்கொடுத்து உதவுவதற்கும் கையில் காசு கிட்டாது.

"முக்கியமாய் உன் உதடுகளாகிய கதவுகளைப்பற்றி நீ மிகக் கவனமாயிருக்கவேண்டும்; ஏனெனில் அந்தக் கதவுகள், காது கண் இவற்றின் கதவுகளை உறுத்தியிடித்துத் திறக்கச்செய்வதான பல

கெட்ட விஷயங்களை அதிகமாய் உபயோகிக்கின்ற ஓரிடத்தைப் பத்திரமாய்க் காக்கின்றன. அந்தக் கதவுகள் தமக்குத்தாமே வெகு சுலபத்தில் திறந்துகொள்ளுந் தன்மையுடையவை. ஆதலின் நாமும் அந்த வாயிலைப் பத்திரமாய்க் காத்துக்கொண்டிராமல் கொஞ்சம் உபேக்ஷைசெய்துவிட்டால்,

"தீயினாற் சுட்டபுண் ணுள்ளாறு மாறாதே
நாவினாற் சுட்ட வடு"

என்கிறபடி பலபேர்க்கு மனவருத்தம் உண்டாக்கத்தக்கவையும், தனக்கே கெடுதி விளைக்கத்தக்கவையுமான பல துர்ப்பாஷைகள்தாமே வெளிப்படும். ஆதலால் நீ, உனக்குவேண்டிய அறிவாவது, அல்லது நன்றாய்ப் பேசுவதற்கு வேண்டிய பல விஷயங்களாவது பூர்த்தியாய்த் தேடிக்கொள்கிறவரையில் நீ அதைத் திறவாமல் மூடி வைப்பாயாகில் மிக்க நன்மையடைவாய்.

"இவற்றையெல்லாம் நீ காப்பது ஒரு பெரிய காரியமன்று. உன் தேகத்தின் உட்புறத்திலிருக்கிற மனதின் கதவை இமைகொட்டாமற் காப்பதே மிக்க வருத்தமானகாரியம். துராசைமுதலியவை மனதில்வந்து புகாதபடி அந்தக் கதவு காக்கின்றது. அப்படிப்பட்ட கெட்ட எண்ணங்கள் ஒன்றும் உள்ளே நுழையாமல் மனச்சாக்ஷி வாசற்காப்பானாய்க் காத்துக்கொண்டிருக்கும். அதன் வலிமையையுந் தடுத்து ஏதாவது ஒன்று உள்ளே புகத்துணியுமானால் அத்தருணத்தில் அது பலதடவை உறுத்தியுறுத்தி நமக்குத் தெரிவிக்கும். அதன் அறிவிப்பை நாம் அலக்ஷியஞ்செய்தால் அதுவும் நம்மிடத்தில் உதாசினமாய்க் கடைசியில் கண்டவர்களுக்கும் வழிவிட்டுக் கண்ணயர்ந்துபோம். ஆதலால் அப்படிக்கு ஒருநாளும் நேராமலிருக்கும்படி நாம் கடவுளைப் பிரார்த்திக்கக்கடவோம். சகலலோக ரக்ஷகனான கடவுளுடைய பொற்றாமரையடிகளைப்போற்றுவார்க்கு ஒருகுறையும் உண்டாகாது. இதைவிட வேறென்ன நான் உனக்குச் சொல்லப்போகிறேன்" என்றான். அதைக்கேட்டுப் பேரன் பாட்டன்சொற்படி நடந்து பெருமையாய் வாழ்ந்திருந்தான்.

கிளியைக்குறித்த சம்பாஷணை.

இத்தேசத்தில் ஒருகால் கலியாணகோடியென்று ஒரு கனவானிருந்தான். அவனுக்கு ஆணும் பெண்ணுமாய் ஐந்தாறு குழந்தைகள். அவர்களுள் சுமதியென்றும், சுந்தரியென்றும், மோகனமென்றும், மதிமுகமென்றும், பூம்பாவையென்றும் ஐந்து பெண் குழந்தைகள்; மாணிக்கமென்று ஒரு ஆண்குழந்தை. இப்பிள்ளைகளெல்லாரும் படிக்கத்தக்க வயதுவந்தபோது, பாடசாலைக்குச்செ

ன்று படிக்கும்நேரந்தவிர மற்றவேளைகளில் வீட்டுவாயிலில் உட்காந்து களித்துப்பேசியும் குதித்துவிளையாடியும் விநோதமாய்க் காலங்கழிப்பார்கள். தந்தையும் அம்மக்களுக்கு விருப்பமான விளையாட்டுக்கருவிகள் பலவும் வேண்டுமளவு வாங்கிக்கொடுப்பான். அம்மக்களுள் சுந்தரியென்பவளுக்குக் கிளிகளை வைத்துக்கொண்டு விளையாடுவதிலேயே விருப்பம் அதிகம். அது தெரிந்து கலியாணகோடி ஒருநாள் மிகவும் அழகான பஞ்சவர்ணக் கிளியொன்று புதிதாய் வாங்கிவந்து கொடுத்தான். அச்சிறுமி சகோதரிகளுடன் அந்தக் கிளியை வைத்துக்கொண்டு ஒழிவுவேளைகளில் அதற்கு அன்னமிடுவதும், அழகுசெய்வதும், பேசப் பழக்குவதுமாய்ப் பொழுதுபோக்கிவந்தாள். அன்றையதினம் அந்தச் சுந்தரி தன் அக்காளான சுமதியுடன் அடியில்வருமாறு குறித்துப்பேசலானாள்.

சுந்தரி: தாயே! எனக்கு ஒரு சந்தேகமுண்டு; நீதான் அதைத் தெளியச்செய்யவேண்டும். பக்ஷிகள்கூடக் கருதுகின்றனவோ?

சுமதி: நான் உனக்குப் பதில்உரைப்பது பின்பாகட்டும்; அதைப் பற்றி நீ ஏன் இப்போது விசாரிக்கிறாய்? முதலில் நீ அதை எனக்குத் தெரியச்சொல்.

சுந். பக்ஷிகளெல்லாம் பேசுகின்றனவே; கருத்தில்லாமல் என்றைக்காவது பேசக்கூடுமா? அதற்காகவே விசாரிக்கலானேன்.

சும. எனக்குச் சொல்ல அச்சமாயிருக்கிறது; எண்ணமேயில்லாமல் அநேகர் பேசுகிறார்கள்.

சுந். ஆம், அது உண்மைதான். அதிகமாய்ப் பேசுகிறவர்களுக்கு ஆலோசனை மட்டு என்று நம்முடைய அன்னைகூடச் சொல்லுகிறாள். என் பஞ்சவர்ணக்கிளிக்கு நானும் மோகனமும் பல சொற்களும் எழுத்துக்களும் கற்பித்துக்கொடுக்கிறோம். அவற்றை அது உடனே நன்றாய் அறிந்துகொண்டு சொல்லிக்கொடுத்தபடியே திருப்பிச்சொல்லுகின்றது, ஒருவாறு பாட்டும் பாடுகிறது; ஆயினும் புத்தகத்தைப் பார்த்துப் படிக்கச்சொன்னால், அப்போது வெருளவெருளப் பேய்விழி விழிக்கின்றது; தலையைச் சொறிகிறது; காலைப் பீறுகிறது; பாடத்தைச் சொல் என்று கேட்கையில் நம் மாணிக்கம் என்னென்ன சேஷ்டைகள் செய்வானோ, அதைப்போலப் பதின்மடங்கு சிலவிஷங்கள் செய்கின்றது. கண்ணைச் சுழற்றிச் சுழற்றிப் புத்தகத்தைப் பார்ப்பதுபோலப் பாவிக்கிறதேயொழிய, புத்தகத்தினின்றும் ஒரெழுத்துகூடக் கற்றுக்கொள்ளுகிறதில்லை. அதற்காக நான் எந்நேரம் போராடினாலும் வீணாய்ப்போகின்றது. அதோ பார்! மோகனம் அத்தோடு வாதாடுகிறாள்.

மோக. (கிளியின்முன் ஒரு புத்தகத்தைப் பிரித்துவைத்துக்கொண்டு) அதென்ன சொல்?

கிளி: அதென்ன சொல்?

மோக. வாயில்வந்தபடி பிதற்ருதே பத்திரம்!

கிளி: வாயில்வந்தபடி பிதற்ருதே பத்திரம்!

மோக. என்ன நீ பெருமடையனுய்ப் பேசுகிருய்?

கிளி: என்ன நீ பெருமடையனுய்ப் பேசுகிருய்?

மோக. நான் சொல்வதை நீ கவனியாதிருக்கிருய்! உனக்கென்ன உடம்பு ஊருகின்றதோ?

கிளி: நான் சொல்வதை நீ கவனியாதிருக்கிருய்! உனக்கென்ன உடம்பு ஊருகிறதோ?

சுந். அதோ பார்த்தாயா சுமதி! அந்தப் பேதைப்பறவை அவள் சொல்வதையே திருப்பிச்சொல்லுகிறது.

சும. ஆம், இது ஒருவகையான பிரதித்தொனியேயன்றி வேறல்லவென்று, பறவைகளின் இயற்கையைக் கண்டறிந்த அநேகர் சொல்லக்கேட்டிருக்கிறேன்.

மதி. அதோ மாணிக்கம் படித்துவிட்டுப் பாடசாலையிலிருந்து புத்தகக்கட்டோடு வருகிருன்; இதோ நான் ஓடிப்போய்த் தந்தை நமக்கு வாங்கிவந்திருப்பதை அவனேடு சொல்லுகிறேன்.

பூம். அவர் வாங்கிவந்தது ஒரு கருங்குரங்காளுல், அதைப் பார்க்க அவன் அதிக ஆவலுடன் ஓடிவருவான். அவன் எப்போதும் கருங்குரங்கைப்பற்றியே பேசிக்கொண்டிருக்கிருன்.

மதி. குரங்கைக்கூட ஒருவன் விரும்புவானே? அதைப்போல விகாரஜந்து வேறில்லையே; மேலும் அது ஓயாமல் தீங்குசெய்துகொண்டிருப்பதல்லவா? குரங்கைவிடக் கிளியே எனக்கு அதிக அழகாய்த் தோன்றுகின்றது. மாணிக்கம்! மாணிக்கம்! ஓடிவா; தந்தை நமக்கு என்னவாங்கிவந்திருக்கிருர் பார்த்தையா?

மாணிக்கம்: கருங்குரங்கோ?

பூம். எனக்கு முன்னமே தெரியுமே; கருங்குரங்கைக் கண்டால்தான் அவனுக்கு அதிகமாய்க் கொண்டாட்டம்.

மதி. அண்ணே! இது குரங்கைப்பார்க்கிலும் கோடிபங்கு அதிகமான சிறப்புடையது; வெகு நேர்த்தியான பஞ்சவர்ணக் கிளி, இதன் அழகைவந்துபார்.

(மாணிக்கம் தன் தங்கையைத் தொடர்ந்து கிளிக்கூட்டண்டைபோனுன். மதிமுகம் அதனண்டை ஒரு சிறு பழத்துண்டை எறிந்தாள். கிளி அதை எடுத்துக் கறித்துத் தின்றது.)

மதி. மாணிக்கம்! இந்தப் பக்ஷி இளமையிலேயே எத்தனை அழகாயிருக்கிறதுபார்! வெகுசுந்தரமான சுகம்!

கிளி: வெகுசுந்தரமான சுகம்! வெகுசுந்தரமான சுகம்!

பூம். இது எவ்வளவு திருத்தமாய்ப் பேசுகிறது!

மாணி. நீ என்னதான்சொல்; குரங்கைப்போல இந்தக் கிளியினிடத்தில் எனக்கு மனம் பதியவில்லை. வெகு சுந்தரமான சுகம் என்றுதனக்குத்தானே இப்போது வீணுய் ஏன் இது பிதற்றுகிறதே?

கிளி: வெகு சுந்தரமான சுகம்! வெகு சுந்தரமான சுகம்.

(மாணிக்கம் அதைக்கேட்டு நகைத்தான். கிளியும் அவனைப்போல வே நகைத்தது. அதைக்கேட்க மாணிக்கத்திற்குப் பெருங்கோபமுண் டாயிற்று.)

மாணி. என்னவென்று நினைத்து நீ என்னைக்கண்டு நகைக்கிறாய்?

கிளி: என்னவென்று நினைத்து நீ என்னைக்கண்டு நகைக்கிறாய்? வெகு சுந்தரமான சுகம்! வெகு சுந்தரமான சுகம்!

மாணி. ஓகோ! குறும்பாட்டம் ஆடுகிறையே!

கிளி: ஓகோ! குறும்பாட்டம் ஆடுகிறையே!

(மாணிக்கம் ஒரு சிறு கல்லெடுத்து அதன் கூட்டிலெறிந்தான்.)

பூம். என் செல்வமே, மாணிக்கம்! நீ முகதாக்ஷிணியமில்லாத முன்கோபியாயினும், உன் சுடுமுகத்தைக் கிளியினிடத்தில் காட் டாதே!

கிளி: முகதாக்ஷிணியமில்லாத முன்கோபி! முகதாக்ஷிணியமி ல்லாத முன்கோபி!

மாணி. பூம்பாவாய்! இப்போது நீ இந்தப்பேச்சு ஏன் பேசி னாய்? இந்தப் பொல்லாத பறவை அதைத் தெரிந்துகொண்டதே; முன்கோபியென்று என்னைக் கூவுவதை நான் பொறுத்திரேனென்று உனக்குத் தெரியாதோ?

கிளி; முன்கோபி! முன்கோபி!

மாணி. நீ வாயைமூடுகிறையா என்ன? பஞ்சைப்பறவையே!

(கிளி நகைத்தது.)

மதி. தம்பி! அது கிடக்கிறதுபோ, நமது பூம்பாவை கிளிக்குக் கற்றுக்கொடுக்கவேண்டுமென்ற இப்பேசுபேசினாள்? அவள் தற் செயலாய்ச் சொல்லும்போதே அது தெரிந்துகொண்டது. அதை இந்தக் கிளி சீக்கிரத்தில் மறந்துவிடும்; மேலும் தான் சொல்வதற் குப் பொருள் இன்னதென்று அதற்குத் தெரியாது; ஆதலின் அதைப் பெரிதாய்ப் பாராட்டிக் கோபிப்பதில் பயனென்ன?

மாணி. என் அருமைத்தாயே! நீ எப்போதும் பொறுமைக் குணம் உடையவளாதலால், ஒருவருக்கும் கோபமுண்டாகாமல் அடக்கி அமைதியாயிருக்கும்படிச் செய்ய முயல்கிறாய்; நீ என்ன வோ இந்தப் பேய்ப்பறவை வெகு அழகாயிருக்கிறதென்று சொல்லுகிறாய்; என்ன இருந்தும் எனக்குக் குரங்கினிடத்தில் ஆசையுண்டாவதுபோல் இதனிடத்தில் உண்டாகவில்லை.

கிளி: வெகுசுந்தரமான சுகம்! வெகுசுந்தரமான சுகம்!

பூம். குரங்கு பார்க்கவழங்காத விகாரஜந்துவென்பதிருக்கட் டும்; அது எப்போதும் ஏதாவது குறும்புசெய்துகொண்டேயிருப்ப தல்லவா?

மாணி. பெருங்குரங்குகளிருக்கட்டும்; சில குரங்குக்குட்டிகள் எத்தனை அழகாயிருக்கின்றன! அவற்றின் அழகு உன் கிளிக்கு என்றைக்காவது வருமா? குரங்குகள் துஷ்டத்தனஞ்செய்கின்றனவென்கிறையோ? உன் கிளிகூட அப்படித்தானிருக்குமென்று எனக்குத் தோன்றுகின்றது. பெண்களே! இப்போது நான் உங்களுடன் ரகசியச்செய்தியொன்று சொல்லுகிறேன்; நாளையதினம் நமது குழந்தைக்குப் பிறந்தநாளல்லவா? அதற்காகப் பழவகைகள் வாங்கிவந்திருக்கிறேன்; பாருங்கள்!

மதிமுகமும் பூம்பாவையும்: எதோ எதோ, என்னபழம் காட்டு பார்ப்போம்? ஓ! ஓ! வெகுநேர்த்தியான பழம்! வெகுநேர்த்தியான பழம்!

கிளி: வெகுநேர்த்தியான பழம்! வெகுநேர்த்தியான பழம்!

மாணி. இதோ பார்த்தாயா! இதற்காகவே நான் இதை வாய்விட்டுச் சொல்லப்பயந்தேன். இதை இந்தக் கொடியகிளி கற்றுக்கொண்டதே; இனி இச்செய்தி இதின்வாயில் நிற்குமா?

பெண்கள்: இந்தக் கிளி இதை உடனே மறந்துவிடும்; அதைப் பற்றி உனக்கேன், நீ வாங்கிவந்தது வெகுநன்றாயிருக்கிறது. எவ்வளவு சிறந்த வெகுமதி!

(இப்படிப் பேசுகையில் அங்கே அவர்களின் தாய் வந்து சேர்ந்தாள்.)

தாய்: என்ன நன்றாயிருக்கிறது? என்ன வாங்கிக்கொண்டு வந்திருக்கிறாய் மகனே!

கிளி: வெகுநேர்த்தியான பழம்! எவ்வளவுசிறந்த வெகுமதி!

மாணி. இந்தத் தீயபறவை இதை வெளியிடுமென்று எனக்கு முன்னமே தெரியுமே!

(என்று சொல்லி அவன் அதிக எரிச்சலுடன் அதன் கூட்டில் ஒரு கல்லையெடுத்து எறிந்தான்.)

கிளி: முன்கோபி! முன்கோபி!

(மாணிக்கம் அவ்விடம்விட்டு ஓடிப்போக ஓடி யெடுத்துவைக்க வாசற்படி தடிக்கிக் கீழேவிழுந்தான்; கிளி சிரித்தது.)

தாய்: நடந்தசெய்தியென்ன? மாணிக்கம் ஏன் இவ்வளவு வருத்தப்படுகிறான்?

கிளி: முன்கோபி! முன்கோபி!

(மதிமுகம் எழுந்துபோய் மாணிக்கத்தைக் கைபிடித்து அழைத்து வந்தாள்.)

மாணி. அருமைத்தாயே! நாளை நமது குழந்தையின் பிறந்தநாளென்று அதற்காகப் பலவகைப் பழங்கள் வாங்கிவந்தேன்; நாளைவரையில் அதை ரகசியமாயே வைத்திருந்து அச்சமயத்தில் திடீரென்று எடுக்கவேண்டுமென்று நான் நினைத்திருந்தேன். இந்த அவலக்ஷணமான கிழக்கிளி அதை அனைவர்க்குந் தெரியச்செய்தது.

மதி. இந்தக்கிளி கிழமுமல்ல, அவலக்ஷணமுமல்ல மாணிக்கம்!

கிளி: வெகுசுந்தரமான சுகம்! வெகுசுந்தரமான சுகம்!

மாணி. தாயே! நான் திடீரென்று கோபித்ததற்காக எனக்கு இப்போது மிகவும் அனுதாபம் உண்டாகின்றது. முன்கோபியென்று பெயரெடுக்கக்கூடாதென்று நான் நெடுநாளாய்த் தீர்மானித்திருக்கிறேன். ஓ! குறும்புக்கிளியே! நல்லது! நல்லது!

(என்று சொல்லிச் சிரித்துக் கிளிக்கூட்டிற்கு நேராய் வலித்துக் கைமுட்டிபிடித்துக் குலுக்கிப் பயமுறுத்தினன்.)

கிளி: வெகுசுந்தரமான சுகம்! வெகுசுந்தரமான சுகம்!

மதி. தாயே! நம் மாணிக்கத்தின் இஷ்டத்திற்கு விரோதமாய் இன்றையதினமே அவன் வாங்கிவந்தவைகளை நீ அறிந்துகொண்டதுமட்டும் எனக்கு விசனமாயிருக்கின்றது. ஆயினும் அவன் அதற்காகக் கிளியினிடத்தில் குற்றஞ்சாற்றுவதற்கு நியாயமில்லை. அது வேண்டுமென்று பொருள்தெரிந்தா சொல்லுகிறது?

மாணி. நீ சொல்வது வாஸ்தவமே; நான் வீணாய் இந்தப் பக்ஷியைத் தூஷித்துப் பழிக்கு ஆளானேன்.

சுமதி: கேட்டையா? இந்தச் சம்பாஷணையால், இந்தப் பறவை தான் பேசுவது இன்னதென்று தனக்குத் தெரியாமலே பேசுகிறதென்பது மதிமுகத்தின் கருத்தென்று தெரிகின்றதல்லவா?

சுந். ஆம், அது யாவர்க்கும் தெரிந்ததுதான்; ஆயினும் சில வேளைகளில் கிளிகள் தாம் சொல்வதைத் தெரிந்துகொண்டவைபோலவே காணப்படுகின்றன. அவைகளுக்குச் சொல்வதை அறியுந்திறமையும் அறிவும் ஆலோசனையும் உண்டா இல்லையா என்பதை அறியவேண்டுமென்றுதான் எனக்கு அதிக ஆவலாயிருக்கின்றது.

சும. திரும்பியும் நான் கேட்கிறேன்; அதை அறியவேண்டுமென்பதென்ன அவ்வளவு அவசியம்.

சுந். கிளிக்கு உண்மையாய் அறிந்துகொள்ளுந் திறமையுண்டானல், நான் சொல்வதைக்கேட்டு அது எனக்குக் கீழ்ப்படியாமலிருப்பதற்காக நான் அதைத் தண்டிக்கவேண்டும்.

சும. அது உனக்குக் கீழ்ப்படிந்திருக்கவேண்டுமென்று விரும்புவதற்கு உனக்கென்ன அதிகாரம்? அப்படி அது கீழ்ப்படியாத பக்ஷத்தில் அதைச் சிக்ஷிப்பதற்குத்தான் என்னசுவாதீனம்?

சுந். அது என்னுடைய கிளியல்லவா? நாள்தோறும் இரைபோட்டு நான் அதைப் பத்திரமாய் வளர்த்துக் காப்பாற்றவில்லையா? அதற்கு இரைஇடுவதற்காகவும், தண்ணீர்வைப்பதற்காகவும் அழகிய கிண்ணங்கள் வாங்கிக்கொடுக்கவில்லையா? தங்கியிருப்பதற்கு மிகவும் நேர்த்தியான கூடு ஒன்று கட்டுவிக்கவில்லையா? இப்படி எவ்வளவோ உதவிசெய்திருக்கிறேனே. இவைகளுக்காக இது என்னிடத்தில் எவ்வளவு நன்றியாய்க் கீழ்ப்படியவேண்டும்!

சும. நல்லது, நீ கேட்ட கேள்விகளுக்கு நான் அளவிலே விடைகொடுக்கிறேன்; முதலில் நான் ஒன்று கேட்கிறேன் சொல்; யாருடைய நன்மைக்காக நீ இப்போது இந்தக் கிளியைப் பிடித்துச் சிறையில் அடைத்திருக்கிறாய்? இதென்னலோகோபகாரமோ?

சுந். நீ என்ன இதைச் சிறையென்கிறாய்? இந்த அழகிய கூட்டில் கொஞ்சி விளையாடுவது கிளிக்கு எவ்வளவு களிப்பாயிராது? இதில் கிளி வெகு சவுக்கியமாய் வாழ்ந்துகொண்டிருக்குமென்று நான் நினைக்கிறேன்.

சும. நீ இந்தப் பறவையின் இயற்கையைக் கவனியாமற் பேசுவதுபோலக் காண்கிறது. பறவைகளுடைய வாழ்க்கையின் வரலாறு எப்படிப்பட்டவை தெரியுமா? முதல்முதல் இந்தப் பறவை பிறந்தவிடமோ, விநோதமாய் வெயில் காய்ந்துகொண்டிருந்த வெளிப்புறம்; இது குடிகொண்டிருக்குமிடமோ, நல்ல மணமுள்ள மலர்களும், நல்ல ருசியுள்ள கனிகளும் நிறைந்த காடுகள்; அங்கே இப்பறவை இஷ்டப்படி வேண்டுமிடமெல்லாம் உல்லாசமாய் உலாவித்திரியும்; சிலவேளைகளில் அயர்ந்து மரத்தடியில் சவுக்கியமாய்ச் சிறு துயில்கொண்டு கண்வளரும். சிலவேளைகளில் சுறுசுறுப்புடன் படபடவென்று இங்குமங்கும் உல்லாசமாய் ஓடி இரை தேடும். சுவாமி இதற்கு மனிதரோடு ஒத்து வாழும் இயற்கையை அளித்திருக்கிறாராயினும், சுயஜாதியான மற்றப் பறவைகளோடு கூடிவாழ்வதிலேயே விசேஷமாய்க் குதூகலமுண்டாகச் செய்திருக்கிறார். இப்படியிருக்க, தன் பிறப்பிடம், பெற்றோர், உற்றோர், உறவினர் அனைவரையும் விட்டுவந்து நீ கட்டிய கடுஞ்சிறையில் குடியிருப்பது இந்தப் பறவைக்குச் சிறிதளவாயினும் சவுக்கியமாயிருக்குமென்று உனக்குத் தோன்றுகிறதா?

சுந். சரிதான்; அப்படியிருப்பது இதற்குச் சவுக்கியமாயிராது.

சும. ஆ! வழிக்குவந்தையா! இனி உனக்கு உத்தரம் உரைப்பது எளிதுதான். இப்போது நீ இதை இங்கே வைத்துக்கொண்டிருப்பது அதன் நன்மைக்காகவோ, உன் பெருமைக்காகவோ?

சுந். என் பெருமைக்காகவேயென்று தோன்றுகிறது.

சும. ஆயின், நீ அதை உன்னிடத்தில் வைத்துக்கொண்டிருப்பதற்காகவும், இரையிட்டு அதைக் காப்பதற்காகவும், கூடு வாங்கி வைத்திருப்பதற்காகவும், அது உனக்குச் சிறிதளவாவது கீழ்ப்படியவேண்டுவதுண்டோ? இவைகளிலெல்லாம் நீ சுயலாபத்தையே முக்கியமாய்க் கருதியிருக்கிறாய்: நீ இவ்வளவு செய்வதும் உன்னுடைய நன்மைக்காகவேயன்றி கிளியின் களிப்பாகவன்று. நீ அதை உனக்கொரு விளையாட்டுக்கருவியாக வைத்துக்கொண்டிருக்கிறையேஒழிய வேறில்லை.

சுந். ஆனல் நான் அப்படிச் செய்வது குற்றமாகுமோ?

சும. குற்றமன்று; பசு பக்ஷி மிருகம் முதலான திரியக் ஜந்துக்களை ஆளும்படியான திறமையை மனிதர்களுக்குக் கடவுள் கொடுத்திருப்பதுமன்றியில், தங்களுக்கு விளையாட்டுக்கருவிகளாக அவைகளை உபயோகித்துக்கொள்ளும்படி அதிகாரமும் தந்திருக்கிறார். ஆயினும் நமக்கு அதிகாரமிருக்கிறதேயென்று நாம் ஒன்றையும் கொடுமையாய் நடத்துவது தகுதியன்று. அப்படிச் செய்தால் நமக்குக் கிடைத்த அதிகாரத்தை அநியாயமாய் உபயோகித்ததாகும். எல்லாப் பிராணிகளிடத்திலும் இரக்கமுற்றிருப்பவனே தயாளுவெனப்படுவான்.

சுந். ஆனால், நான் போஷித்துவருநிமித்தம் இந்தப் பறவை என்னிடத்தில் எள்ளளவும் நன்றிபாராட்டவேண்டுவதில்லையோ?

சும. இல்லை; இவ்வளவோடு சும்மா இருந்துவிடலாமென்று நினைக்கிறையோ? அது உனக்குச் சந்தோஷமுண்டாக்கிக்கொண்டுவருகிறநிமித்தம், நீ அதற்குக் கீழ்ப்படிந்திருக்கவேண்டும். மேலும், அதை அன்பாய் நடத்தவேண்டிய விஷயத்திலும், அதற்குச் சுகமுண்டாக்குகிற விஷயத்திலும் நீ கடவுள் ஏற்படுத்திய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். இந்த ஏற்பாடுகளுக்கு உட்பட்டு நடப்பவர்களுக்குத்தான் பக்ஷிமிருகாதிகளை ஆளும்படியாக ஈசுவரன் அனுமதிகொடுக்கிறார்.

சுந். நீ சொல்வதைப்பார்த்தால் பக்ஷிகளை நாம் தெய்வமாய்க் கொண்டாடவேண்டியதுபோலிருக்கிறதே!

சும. அப்படி ஒன்றுமில்லை; நம்மவிஷயத்தில் பிறர் எவ்வாறு நடக்கவேண்டுமென்று நாம் விரும்புவோமோ, அப்படியே மற்றவர்களிடத்திலும் நாம் நடக்கவேண்டும். முதலில் நாம் ஆரம்பித்ததென்ன? கடைசியில் கொண்டுமுடித்ததென்ன? கிளிகள் கருதுவது உண்டா இல்லையா என்பதல்லவோ நீ கேட்ட கேள்வி? சொல்லுகிறேன் கேள்: கொஞ்சம் ஏறக்குறைய கருத்தென்பது கிளிகளுக்குமுண்டு. அவைகளுக்கு ஆலோசிக்குந்திறமையும், பிறர்சொல்வதைக் கேட்டறியுந்திறமையும் சிறிதளவு உண்டென்று அவைகளைப் பற்றி அநேகங் கதைகளுண்டு. ஆயினும் அநேகம் பறவைகளுக்கு இருப்பதுபோல் அவ்வளவு யுக்தியும் ஊகையும் கிளிகளுக்குக் கிடையாது. கிளிகள் பேசுவதெல்லாம் வெறும் அநுகாரமேயொழிய வேறல்ல; அப்படிப் பேசுவது அவைகளுக்கு இயற்கை. மனிதர்களுடைய வாயில் பேசுவதற்கேற்றதாய் நாக்கு ஒன்று அமைந்திருப்பதுபோல், கிளிகளுடைய வாயிலும் சிறுநாக்கொன்று அமைந்திருப்பதால், அவற்றின் முன்னிலையில் பலதாம் திருப்பிச்சொல்லப்பட்ட சில சிறுசொற்களை அவை அப்படியே அறிந்துகொண்டு நாம் பேசுவதுபோலவே திருப்பிச்சொல்லுகின்றன. மன்னுயிர்களுக்குப் பலவிதமாய்க் குதூகலமுண்டாக்குகிற கிளிகளின் வல்லமை இவ்வளவுதான்.

சுந். இவ்வளவுதானு? சகலமான திரியக்பிராணிகளிலும் கிளிகள் அதிகமான அறிவுடையவையென்று நான் நினைத்திருந்தேனே?

சும. ஒன்றுமறியாத பேதைகளான கிளிகளின் திறமையைக் கண்டே நீ இவ்வளவு ஆச்சரியயப்படுகின்றையே! சில பறவைகளின் வல்லமைகளைப்பார்த்தால் எப்பாடுபடுவையோ? ராஜாளி, பருந்து, கருடன்முதலிய பறவைகளெல்லாம் எவ்வளவு யுக்தியும் ஆலோசனையும் ஊகையுமுடையவை! சில பறவைகள் வெகு குறிப்பாய்ப்பார்த்து இரைகளைத் தந்திரமாய்த் தூக்கிக்கொண்டு போம். தமது அளவுக்கு அதிகமாய் இரைகிடைக்குமானல் அதை மறுவேளைக்குப் பத்திரமாய்க் காப்பாற்றிவைத்துக்கொள்ளும். அபாயம் ஏதாவது நேரிடுவதாயிருந்தால் அதற்குவேண்டிய எச்சரிக்கையை முன்னமே தேடிக்கொள்ளும். வலைவிரிக்க வேடன் எவனுவது வரக்கண்டால், உடனே அந்தச் செய்தியைத் தம்மினத்திற்கெல்லாம் தெரிவித்து எச்சரிக்கும்படி உரத்துக்கூவும். அநேகம் பறவைகளுக்கு அந்தந்த தருணத்திற்குத் தக்கபடி வெவ்வேறுவிதமாகக் கூவத் திறமையுண்டு. ஒரு ஜாதிப்பறவைகள் மற்ஞெரு ஜாதிப்பறவையோடு போராடவிரும்பினல், அதற்குத் தகுந்தபடி ஏற்பாடு செய்துகொண்டு எல்லாங் கூட்டமாய் எதிர்த்தோடும். இப்படிப் பறவைகளுள் மிக்க வல்லமையுடையவை அநேகமுண்டு.

சுந். இவையெல்லாம் வெகு விநோதச்செய்கைகள்! இப்போதுதான் எனக்கு நினைப்புவருகிறது; காக்கைகளிடத்தில் பல புதுமைகளிருப்பதோடுகூட ஒன்று, இரண்டு, மூன்றுவரையில் கணக்கெண்ணுகிற திறமையுமுண்டு. அதைப்பற்றிச் சிறுகதையொன்று சொல்லக்கேட்டிருக்கிறேன். அதென்னவெனில், தன் புலத்தில் பலதடவை காக்கைகள் வந்து கொடுமைசெய்யக்கண்டு ஒருவன் அக்காக்கைகளைக் கொல்லவேண்டுமென்று துப்பாக்கிகொண்டு அவைகளைக் கொல்லப்போனுன். அவனுக்குத் தெரிந்த யுக்தி காக்கைகளுக்குந்தெரியும். துப்பாக்கி இன்னதென்றும், அதன் காரியம் இப்படிப்பட்டதென்றும் அவைகளுக்கு நன்ருய்த் தெரியுமாதலால் அவன் முயன்றதைக்கண்டுகாக்கைகள் அவன் குண்டுக்கு எட்டாத தூரத்திற்போய் நின்றன. அந்த முயற்சி தவறிப்போகவே அவன் வேருெரு உபாயஞ்செய்தான். அதாவது: அந்தப் புலத்தில் சிறிதாய்க் குடிசையொன்றுபோட்டு அங்கிருந்து தன் குண்டுக்கு எட்டும்படியான தூரத்தில் குதிரைப்பிணம் ஒன்றைக் கட்டிவைத்தான். காக்கைகள் அதைப் பிடுங்கித்தின்னவரும்; அத்தருணத்தில் அவற்றைச் சுட்டுப்போடலாமென்பது அவன் கொண்டகொள்கை. இந்தச் சூதுக்குக் காக்கைகள் உட்படுகிறவைகளா! அவன் அந்தக் குடிசையில்வந்து நுழைவானுனல், காக்கைகள் உடனே பறந்துபோய்க் கொஞ்சந்தூரத்திலுள்ள மரங்களில் உட்காரும். அவன் அந்தக்

குடிசையை விட்டுப்போமளவும் ஒன்றாவது கீழிறங்கிவராது. அவன் அப்புறம்போனவுடனே எல்லாம் கீழிறங்கிவந்து குதிரைப்பிணத்தைப் பிடுங்கத்தொடங்கும். ஆயினும் அப்போதுகூட ஒரு காக்கைமாத்திரம் அவைகளுக்கு அபாயம் நேரிடுமானால், அப்போது எச்சரிக்கையுண்டாக்கும்படி தூரத்தில்நின்று காவல் காத்துக்கொண்டிருக்கும். இப்படி இந்த உபாயமும் தவறிப்போனதுகண்டு அந்த மனிதன், எப்படியாவது அவைகளைக் கொல்லவேண்டுமென்று, ஒருநாள் தன் மகனையுங்கூட அந்தக் குடிசைக்கு அழைத்துவந்தான். அம்மகன் அவ்விடத்தைவிட்டுப் போனால் காக்கைகள் உடனே கீழிறங்கும், தான் உள்ளேநின்று கொன்றுபோடலாமென்பது அவனுடைய எண்ணம். அந்தச் சூதுகாக்கைகளுக்குத் தெரியாமற்போகவில்லை. அவன் மகன் குடிசையைவிட்டுப் போனபோது காக்கைகள் கா! கா! கா! என்றுகூவி அதோ ஒருவன் போயினான் என்று சொல்லிக்கொண்டன. ஒன்றாவது தானிருந்தவிடத்தைவிட்டு அசையவேயில்லை. அதைக்கண்டு அம்மனிதன் மறுநாள் தன் இரண்டு பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டுவந்து அவர்களை ஒவ்வொருவனாய் வீட்டுக்குப்போகவிட்டான். அவர்கள் போவதைப்பார்த்துப் பக்கத்துமரங்களில் உட்கார்ந்திருந்தகாக்கைகள் இதோ ஒருவன் போகிறான்! இதோ ஒருவன் போகிறான்! என்று தமது பாஷையாலேயே சொல்லிக் கணக்கிட்டுக்கொண்டிருந்தன. ஆயினும் ஒன்றாவது கீழேவரவில்லை. ஏனெனில், அவர்கள் குடிசைக்கு வரும்போது மூன்றென்று அவை கணக்கிட்டிருந்தன. வெகுநேரம் காத்தும் காக்கைகள் கிட்டவராமற்போகவே, அவன் மறுநாள் தன்னுடன் மூன்றுபேரைக் கூட்டிக்கொண்டுவந்தான். அவர்கள் ஒவ்வொருவராய் அவ்விடம்விட்டுப் போம்போது, இதோ ஒருவன் போயினான்! இதோ இருவர் போயினார்கள்! இதோ மூவர் போயினார்கள்! என்றுசொல்லி எண்ணிக்கொண்டிருந்தன. அம்மூவரும் கண்மறைவாய்ப் போனவுடனே காக்கைகள் இறங்கிக் குதிரையண்டைவந்தன. குடிசையிலிருந்த நான்காவது மனிதன் குண்டுவைத்தடித்தான். காக்கைகள் இறந்துபோயின. அதைப்பார்த்து அந்த மனிதன் இவ்விஷயத்தைப் பலதரம் பரிசோதித்தான். பலதடவையிலும் இப்படியே நடக்கவே, காக்கைகளின் கணக்குக்கு மூன்றோடு முடிவுதானென்று நன்றாய்த் தெரிந்து சொல்லியிருக்கிறான்.

சுமதி: இந்தச் சரித்திரம் வெகு விந்தையாயிருக்கிறது; சில பக்ஷிகளின் புத்திகூர்மையை இது விவரமாய் விளக்கிக்காட்டுகின்றது. நாற்கால் ஜந்துக்களிலும் விசேஷமாய் யுக்தி ஆலோசனையுள்ள மிருகங்களுண்டு. திரியக் ஜந்து அதாவது விலங்கு பறவை முதலியவைகளுக்கெல்லாம் இயற்கையறிவே முதன்மையான வழிகாட்டியாம், யோசித்துப்பார்க்குமளவில், உலகத்திலுள்ள எல்லாப் பிராணிகளுக்கும் ஒருவாறு நினைக்குந் திறமையுண்டென்று காணப்படு

கின்றது. அவைகளுக்குச் சில விஷயங்களைக் கற்பித்துங்கொடுக்கலாம். ஆயினும் அவை செய்யும் காரியமெல்லாம் அநேகமாய் வழக்கத்தினாலேயேயொழிய வேறல்ல; அவைகளுக்கு ஆலோசனைத்திறமையுண்டென்பதும் சில விஷயங்களில் தெரியவருகின்றது. எப்படியிருந்தாலும் அவைகளுக்கு ஒருபோதும் விசேஷ ஞானமுண்டாகமாட்டாது. இவ்வுலகங்களைப் படைத்துக் காப்பவனாய் ஒருவன் உண்டென்றும், அவன் ஏற்படுத்திய விதிகள் இத்தன்மையனவென்றும் அவைகளுக்குத் தெரியாது. இதுதான் மன்னுயிர்களுக்கும் மற்றவைகளுக்குமுள்ள பேதம். மனிதர்களுக்குக் கடவுளுடைய நிலை இத்தன்மையதென்றும், அவருடைய சட்டம் இப்படிப்பட்டதென்றும் நன்றாய் அறிந்துகொள்ளவும், விதிவிலக்குகளை நன்றாய்த் தெரிந்துகொண்டு அதன்படி நடக்கவும் திறமையுண்டு.

சுந். இப்போது எல்லாம் எனக்கு நன்றாய்த் தெரிந்தது. ஆயின் திரியக் ஜந்துக்களை நாம் நமக்குச் சுவாதீனமாய் அடக்கியாள்வது போல் மன்னுயிர்களை ஆள அதிகாரமில்லையோ?

சும. இல்லை.

சுந். ஆயின் பிள்ளையைக்கூடத் தகப்பன் அடக்கவேண்டுவதில்லையா?

சும. அதற்குமாத்திரம் ஒருவிதி ஏற்பட்டிருக்கிறது. பிள்ளைகளைமட்டும் தகப்பன் அடக்கிக்கொண்டுவரவேண்டுவதுதான்; ஆயினும் அதைத் தகப்பன் மக்களுடைய நன்மைக்காகச் செய்யவேண்டுமேயொழிய தன் சொந்த லாபத்திற்காகச் செய்யக்கூடாது. அப்படிச் செய்பவர்கள் கடவுளுக்குக் குற்றவாளிகளே.

சுந். ஆயின், மக்கள்தவிர மற்றெவரிடத்திலும் நாம் அதிகாரஞ்செலுத்தக்கூடாதோ?

சும. அவர்களுடைய லாபத்திற்காகச் செலுத்தலாம். மற்றப்படி கூடாது. கடைசியாய் ஒரேவிஷயம் சொல்லுகிறேன் கேள்: திரியக் ஜந்துக்களானால், அவைகளுக்குக் கொடுமை யாதொன்றும் செய்யாதபடி அவைகளை நாம் சொந்தநன்மைக்கு உபயோகித்துக்கொள்ளலாம். மன்னுயிர்களானால், நாம் எதுசெய்தாலும் அவர்களுடைய நன்மைக்காகவே செய்யவேண்டும். ஆதலால் நீ இப்போது இந்தக் கிளியைக் கொடுமை யாதொன்றுஞ்செய்யாமல் சுகமாய் உன் சந்தோஷத்திற்காக வைத்துவிளையாடலாம்.

சுந். இப்போது என் மனது ஐயமற்றுத் தெளிவாயிருக்கின்றது.

சும. மன்னுயிர்களுக்கும் மற்றப் பிராணிகளுக்கும் மற்றொரு வேற்றுமையுமுண்டு. அதென்னவென்கிறையோ? திரியக் ஜந்துக்களெல்லாம் தாம் விதிவசமாய்ச் செய்யவேண்டிய எல்லாக்காரியங்களையும் வெகு நன்றாய்ச் செய்துமுடிக்கின்றன. மனிதர்கள் அப்படிச் செய்யமாட்டார்கள். திரியக்ஜந்துக்கள் என்றைக்காவது வேண்டாவெறுப்பாய் ஏதாவது ஒரு காரியஞ்செய்யக் கண்டிருப்

பாயா? மன்னுயிர்கள் அதது இருக்கவேண்டியபடியே எந்தக் காரியத்தையாவது செய்துமுடிக்கப் பார்த்தாயா? இதற்குக் காரணமென்னவெனில், பிராணிகள் எதையும் தம் இயற்கையறிவைக் கொண்டு தீராக்காரியமாய்ச் செய்துமுடிக்கின்றன. மனிதர்களுக்கு ஆராயுந்திறமையிருப்பதனால் தம்புத்திக்குத் தோன்றியபடிக் கோணலாய் ஒருவழிபிடித்துக் கடைசியில் காரியத்தைக் கெடுக்கிறார்கள். இதுமாத்திரமேயன்றி இவ்விரு வகுப்பிற்கும் சாமர்த்தியத்தைப்பற்றிய வேற்றுமை விசேஷமாயுண்டு. சகலமான திரியக் ஜந்துக்களிலும் நீர்நாய் மிக்க புத்திகூர்மையுடையதென்பார்கள். மனிதர்கள் தாம் வசிப்பதற்காகக் கட்டிய லண்டன்முதலிய நகரங்களிலுள்ள மாளிகைகளெங்கே? நீர்நாய்முதலிய ஜந்துக்கள் குடியிருக்கக் கட்டிவைத்துக்கொண்டிருக்கிற குடிசைகளெங்கே? மனிதர்கள் இப்பூமியில் வாழ்கிற பெருவாழ்க்கையெங்கே? பக்ஷி மிருகாதிகளின் பேதைப்பிழைப்பெங்கே? மன்னுயிர்கள் எப்போதும் தங்களுக்கு எல்லா நன்மைகளையும் அளித்துக் காக்கின்ற பரமபுருஷனைப்போற்றிப் பரமாநந்தமடைந்ததெங்கே? அவைகள் உண்ணுவதும் உறங்குவதுமாய் வீணே காலங்கழிப்பதெங்கே?

என்றிப்படி அவர்கள் பொழுதுபோமளவும் பேசிக்கொண்டிருந்து பின்பு வீட்டுக்குச்சென்று சந்தோஷமாய்ப் புசித்து நித்திரைபோனார்கள்.

சிறுவர்க்கான கதை.

தவளராஜன் கதை.

அவரவர் எண்ணப்படியே எல்லாங் கைகூடுவதாயிருந்த முற்காலத்திலே அரசன் ஒருவன் இருந்தான். அவனுக்கு அதிகரூபவதிகளாய் ஐந்தாறு பெண்கள். அவர்களுள் கடைசிப்பெண்மாத்திரம், எப்போதும் அவளைப்பார்த்துக்கொண்டிருக்கிற தாய்தந்தையர்கள்கூட இதென்ன தெய்வப்பெண்ணோவென்று அடிக்கடி பார்க்கும்போதெல்லாம் பிரமிக்கும்படி, அவ்வளவு அழகியாயிருந்தாள்.

அந்த ராஜாவின் அரண்மனைக்கு அருகில் அழகிய சிங்காரத்தோட்டமொன்று உண்டு; அத்தோட்டத்தில் அநேகம் விருக்ஷங்களும் தடாகங்களுமிருந்தன. அந்த ராஜாவின் கடைசிப்பெண் வேண்டும்போதெல்லாம் அந்தத் தோட்டத்திற்குப் போய் தடாகக்கரையில் பொன் பந்து வைத்துக்கொண்டு அதை ஆகாயத்தில்போட்டுப் பிடித்து விளையாடிக்கொண்டிருப்பாள்.

அப்படியிருக்கையில் ஒருநாள், வழக்கப்படி விளையாடுகையில் அவள் ஆகாயத்தில் வீசியெறிந்த பந்து திரும்பி அவள் கையில்

வந்துவிழாமல் கீழே வீழ்ந்து புரண்டோடி நடைபாவியில் வீழ்ந்தது. அந்தப் பெண் அதைப்பார்த்துக்கொண்டே அதை எடுக்கும்படி பின்தொடர்ந்து ஓடியும் அது அதிக வேகமாய் உருண்டு அவள் கையில் அகப்படாமல் ஒருவரும் முழுகியெடுக்கக்கூடாத ஆழத்தில் போய்ச் சேர்ந்தது. அதைக்கண்டு அந்தப் பெண் விசனமடைந்து வர வர உரத்துப் புலம்பத்தொடங்கினாள். அப்படி அழும்போது, "ஓ, அரசன் அருமைமகளே! நீ ஏன் கல்லும் உருகும்படி இவ்வளவு தீனமாய்க் கதறுகிறாய்" என்று ஒரு வார்த்தை கேட்டது; கேட்கவே, அவள் இதென்னவென்று நாலாமூலையிலும் சுற்றிப்பார்த்தாள்; ஒருவரும் தென்படவில்லை. ஒரு தவளை தன் விகாரமான தலையைத் தண்ணீருக்குமேல் தூக்கிக்கொண்டு அவளுக்கு நேராய்வந்துகொண்டிருந்தது. அதைப்பார்த்து அவள்: ஓ, கிழத்தவளையாரே! இப்போது பேசினவர் நீர்தானோ? என் தங்கப்பந்து கைதவறிக் குளத்தில் விழுந்துபோயிற்றென்று கதறுகிறேன் என்றாள்.

அதைக்கேட்டு அந்தத் தவளை: பெண்ணே! அழாதே! வாயை மூடு, நான் ஒன்று சொல்லுகிறேன் கேள்: நான் உன் விளையாட்டுக் கருவியைக் கொண்டுவந்து கொடுப்பேனானால், நீ எனக்கு என்ன பதிலுதவிசெய்வாய் என்றது. அதற்கு அந்தப் பெண்: உனக்கென்னதேவை? நான் கட்டிக்கொண்டிருக்கிற பட்டாடைவேண்டுமா? அணிந்துகொண்டிருக்கும் ஆபரணங்கள்வேண்டுமா? முடியில் முடித்திருக்கும் முத்துக்கிரீடம்வேண்டுமா என்று கேட்க, அந்தத் தவளை: உன் முத்துக்கிரீடமும் பட்டாடையும் பொன்னணிகளும் எனக்கேன்? நீ என்னிடத்தில் உள்ளூற ஆசைவைக்கவேண்டும்; நீ என்னைக் கூட்டாளியாக்கிக்கொண்டு என்னோடுகூட விளையாடவேண்டும்; உண்ணும்போதாகட்டும், உறங்கும்போதாகட்டும் எப்போதும் நான் உன் அண்டையிலேயே இருக்கவேண்டும்; இப்படியெல்லாமிருக்க உனக்குச் சம்மதமென்று நீ வாக்குக்கொடுப்பாயானால் நான் உடனே முழுகி உன் பொற்பந்தை எடுத்துத் தருவேன் என்றது.

இந்த மதிகெட்ட தவளை என்னவோ சொல்லுகிறது; அதன்படி நாம் நடக்கவேண்டுமென்பதென்ன? நம்மோடு கூடிவாழ்வதற்கு இது என்றைக்காவது ஏற்றதாகுமா? என்று நினைத்துக்கொண்டே, அவள்: அப்படியே ஆகட்டும்; என் பந்தைமாத்திரம் சீக்கிரம் எடுத்துக்கொடு உன்னிஷ்டப்படியே நடக்கலாம் என்றாள்.

அந்தப் பேதைத்தவளை அது மெய்தானென்று எண்ணித் தண்ணீரில் முழுகிப் பந்தை எடுத்துக்கொண்டுவந்து அவள் காலண்டை வீசியெறிந்தது. தன் பந்தைப்பார்க்கவே பேரானந்தமடைந்து அதை எடுத்துக்கொண்டு அந்தப் பெண் உடனே வீட்டுக்கு ஓடிப்போயினாள். அவள் ஓடுவதைப்பார்த்துத் தவளை: நில்! நில்! ஓடிப்போகாதே; என்னையும் எடுத்துக்கொண்டுபோ; நான் உன்னவ்

வளவு வேகமாய் ஓடிவரமாட்டேன் என்று கூவிச் சொல்லச்சொல்ல அவள் அதைக் கவனியாமலே வீட்டுக்குப்போனாள். பிறகு நடந்த செய்தியைக் கேளுங்கள்: மறுநாள் அவ்வரசன்மகள் தன் தந்தையோடுகூட சாப்பிட்டுக்கொண்டிருக்கையில், அவர்கள் அரண்மனைவாயிலில் யாரோவந்து: 'ஓ, ராஜாவின் கடைசிமகளே! கதவைத் திற' என்று கூவிக் கதவையிடித்த சத்தம்கேட்டது; இதென்னவென்று அந்தப் பெண் எழுந்துபோய்க் கதவைத் திறந்துபார்த்தாள். அங்கே அந்த விகாரமான தவளை வந்து நின்றது. அதைக் கண்டு அவள் மனம்வெறுத்துச் சரேலென்று கதவைச் சாத்திக்கொண்டு மனம் பதைக்கப்பதைக்க முகத்தில் ரத்தம்செத்துத் தந்தையண்டைபோய் உட்காந்தாள். அவளைப்பார்த்து அந்த ராஜன்: குழந்தாய்! ஏன் மனங்கலங்கிநிற்கிறாய்? வாசலில் பேய் பூதம் ஏதாவது வந்துவெருட்டுகிறதோ என்று கேட்க, அவள்: பேயுமில்லை, பிசாசுமில்லை, ஒரு துஷ்டதவளையென்றாள்.

அதைக்கேட்டு ராஜா: அந்தத் தவளை உன்னை என்னசெய்யச் சொல்லிக்கேட்கிறது என, அவள்: தந்தையே! நேற்று நான் நடபாவியண்டைபோய் விளையாடுகையில், என் பொற்பந்து கைதவறித் தண்ணீரில் விழுந்துபோயிற்று. அப்போது நான் அழுத கூச்சலைக்கேட்டு இந்தத் தவளைதான் அந்தப் பந்தைத் தண்ணீரினின்றும் எடுத்துத் தந்தது. முதலில் நடந்தசெய்தி என்னவென்று கேட்கிறீர்களோ? எனக்குச் சந்தோஷமுண்டாகும்படி இந்தத் தவளை இனிப்பாய்ப் பேசவே, அது கேட்டுக்கொண்டபடியே அதை நான் தோழனாக வைத்துக்கொள்வதாய் ஒப்புக்கொண்டேன். ஆயினும் இது தண்ணீரினின்றும் வெளியே வரமாட்டாதென்று நான் தைரியமாயிருந்தேன். எப்படியோ குதித்துக் குதித்து ஓடிவந்து இது இப்போது இங்கே நம்முடன் உட்காரவேண்டுகிறதே என்றாள். இவ்வளவு நேரத்தில் தவளை பலதரம் கதவையிடித்து: "ஓ, ராஜாவின் கடைசிக்குமாரத்தியே! நீ நேற்று தோட்டத்தில் ஊற்றங்கரையில் கையடித்துச்சொன்ன பேச்சுகளை மறந்துபோனையோ? சீக்கிரம்வந்து கதவைத் திறந்து என்னையும் உள்ளே அழைத்துக்கொண்டுபோ" என்று கூவிற்று.

அந்தக் கூச்சலைக்கேட்டு அரசன்: மகளே! நீ சொன்னசொல் தவறுவது சரியன்று; போய்க் கதவைத் திறந்து தவளையை அழைத்துவா என்று சொல்ல, அந்தப் பெண் அப்படியே எழுந்து போய்க் கதவைத் திறந்தாள். தவளை தத்தித்தத்தி ஓடி அந்தப் பெண் உட்காந்திருக்கும் இடத்திற்குப்போய், உன்னைப்போல் எனக்கும் ஒரு மணைபோடு என்றது. அதற்கு அவள் சற்று மயங்கிநிற்க, தந்தை அதனிஷ்டப்படி நடக்கச்சொல்லி வற்புறுத்தவே அவள் அவனையெதிர்த்துப் பேசமாட்டாமல் அப்படியே செய்தாள். தவளை அம்மணையில் உட்காந்துகொண்டு உன்னைப்போல் எனக்கும் ஒரு

வெள்ளிவாழையிலேபோட்டு அன்னமிடு என்றுசொல்ல, அவள் வேண்டாவெறுப்பாய்த் தந்தைமுகதாக்ஷிணியத்திற்காக அப்படியே நடத்தினாள். தவளே சாப்பிட்டது அங்கிருந்த யாவர்க்கும் வெகு விநோதமாயிருந்தது; ருசிபார்த்துப்பார்த்துப் பெரிய மனிதன்போலப் புசித்தது. ஆயினும் ஒரு கேடுகெட்ட தவளே கூடவந்து உட்காந்து புசிக்கிறதென்பதுமாத்திரம் ஒருவர்க்கும் சம்மதப்படவேயில்லை. அந்த ராஜகுமாரத்தி புசித்தாகுமளவும் தவளேயும் தின்றுகொண்டிருந்து. பின்பு அந்தத் தவளே அவளைப்பார்த்து: பெண்ணே! நான் வயிறுறப் புசித்துப் பசிதணிந்தேன். இப்போது உடம்புமிகவும் ஓய்ச்சலாயிருக்கிறது. சிக்கிரமாய்ப்போய் உன் கட்டிலேச் சீர்ப்படுத்து; கொஞ்ச நேரம்படுத்துக் கண்வளர்ந்து களைதெளிவோமென்றது. அதைக் கேட்டு அந்தப்பெண்: இதென்ன ஓட ஓட வெருட்டுகிறதே, இதைப் பக்கத்தில் விட்டுக்கொண்டு எப்படிப் படுக்கிறது? தவளையைக்கூட ஒருவன் தொடுவானே? இதென்ன துர்ப்பாக்கியமென்று விசனமடைந்து கண்ணீர்விடத்தொடங்கினாள்.

அரசன் அவள் கண்களில் நீர் மாலைமாலையாய்ப் பெருகக்கண்டு கோபங்கொண்டு, ஆபத்துவேளையில் நமக்குக் கைகொடுத்து உதவினவர்களை நாம் உபேக்ஷைசெய்யலாகாது. ‘அன்னமிட்டவீட்டிற் கன்னமிடலாமா’ என்று சொல்லி மகளை அதட்டினான். அவள் அதைப் பார்த்துப் பயந்து கண்ணும்கண்ணீருமாய் அதைக் கையாலேகூடத் தொடவேண்டியிராமல் இரண்டு நுனிவிரலாலே பிடித்துத் தூக்கிக்கொண்டுபோய் அவள் படுக்கையறையில் ஒரு மூலையில்போட்டுவிட்டுத் தான் கட்டில்மேல் உட்காந்தாள். உடனே தவளே குதித்தோடிக் கட்டிற்காலண்டைவந்து என்னை எடுத்துக் கட்டிலின்மேல் விட்டுக்கொள்கிறையா, உன் தந்தையுடன் சொல்லட்டுமா என்று அதட்டியது. அதைக்கேட்டு அந்தப் பெண், தந்தை என்னசெய்வாரோவென்கிற திகில் ஓரண்டையிருக்க, அதின் வார்த்தையைக்கேட்டு மிகக்கோபங்கொண்டு, அந்தத் தவளையையெடுத்து, ஓ, துஷ்டத்தவளையே! இனிமேல் நீ உன் வாயை மூடிக்கொண்டு அடங்கியிருப்பாயல்லவா என்று சொல்லிக்கொண்டே தன் வலிமையெல்லாங்கொண்டு எதிர்ச்சுவரில் வீசியெறிந்தாள்.

அவ்வறையல் தன் உடலில் உறைத்தவுடனே அந்த அவலக்ஷணமான தவளே அழகிய ராஜகுமாரனாக மாறிப்போயிற்று. அந்த ராஜகுமாரனுடைய சுந்தரமான வடிவழகைக்கண்டு அந்தப் பெண் இதென்னவென்று ஒன்றுந்தோன்றாமல் பிரமித்துநின்றாள். அத்தருணத்தில் தவளையைச் சுவரிலறைந்த சத்தங்கேட்டு அரசன் என்ன விசேஷமென்றுபார்க்க ஓடிவந்தான். தன் பெண்பக்கத்தில் யாவரும் வியக்கத்தக்க வடிவழகுள்ள ராஜகுமாரனொருவன் இருக்கக்கண்டு ஆச்சரியப்பட்டு அவனண்டைபோய் உட்காந்து: நீ யார்?

உன் வரலாறு என்னவென்று யோகக்ஷேமங்களை வினவினான். அதற்கு அந்தச் சிறுவன் சொன்னதாவது: ஐயா! நானொரு ராஜகுமாரன்; நான் மேன்மையாய் வளர்ந்துகொண்டிருக்கக்கண்டு சில நாளைக்குமுன்னே மாயக்காரி ஒருத்தி என்னிடத்தில் பகைகொண்டு என்னை ஒரு தவளையாக மாற்றிவிட்டாள்; ஆயினும் அவள் அந்தச் சாபத்திற்கு விமோசனகாலமொன்று ஏற்படுத்தினாள். அதாவது: யாராயினும் ஒரு பெண்பிள்ளை உன்னிடத்தில் இரக்கமுற்று உன்னைத் தண்ணீரிலிருந்து வெளியே எடுத்துக்கொண்டுபோய்க் காப்பாளானால் உடனே உன் சாபம் நீங்குமென்றாள். ஆதலால் இப்போது உம்முடைய மகள் செய்த மகோபகாரத்தாலல்லவோ என் சாபம் நீங்கிற்று என்றுசொல்லிப் பெருமையாய்ப் பேசினான். அந்த ராஜகுமாரனுடைய நற்குணங்களைக்கண்டு வியந்து அவ்வரசன் அவனுக்கு வேண்டியபடி உபசாரங்கள்செய்து தன் மகளை அவனுக்கே கலியாணஞ்செய்துகொடுக்கத் தீர்மானித்தான். அந்த ராஜகுமாரனும் சந்தோஷமாய் அவ்வரசனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு மறுநாள் காலையில் தன் சொந்த நகரத்திற்குப்போகச் சித்தமாயிருந்தான்.

காலையில் உதயமானஉடனே, வெகு அழகாய் வைரமணிகளிழைத்த தங்கக்கடிவாளம் முத்துமுகபடம் முதலியவைகளால் சிங்காரிக்கப்பட்டு தேவலோகத்துக் குதிரைகள்போன்ற எட்டு வெள்ளைக்குதிரைகள் கட்டிய திவ்ய ரதமொன்று அவ்வரசன் அரண்மனைவாயிலில் வந்துநின்றது. அந்த ரதத்தைச்சுற்றிலும் எட்டு பேர் காவற்காரர்கள், நின்றவிடத்தில் நில்லாமல் எப்போதும் படபடவென்று துடித்துக்கொண்டிருக்கும் பெருத்த போர்க்குதிரைகள் மேல் ஏறிக்கொண்டு, உருவினகத்தி உருவினபடியே நின்று காவல் காத்திருந்தார்கள். அந்த ரதத்தோடுகூட ராஜகுமாரனுடைய அந்தரங்க சேவகனும் ஒருவன் வந்திருந்தான். அந்த ராஜகுமாரன் தவளையாக மாறிப்போனபோது அந்தச் சேவகன் மிகவும் துக்கமடைந்து, சோகத்தால் மனம்பிளந்துபோமோ என்னவோவென்று பயந்து இருப்பப்பட்டத்தால் மூன்று சுற்றுசுற்றித் தன் மார்பை இறுக்கிக் கட்டியிருந்தான்.

ஏறிப்போக ரதம்வந்து வாயிலில் காத்திருப்பதைக்கண்டு ராஜகுமாரன் தன் பட்டணத்திற்குப் போகப் புறப்பட்டான். அவன் பின்னோடு ராஜகுமாரத்தியும் பிரயாணமாய்ப் புறப்பட்டாள். அதைக்கண்டு அந்த ராஜாவும் தன் மகளைமாத்திரம் தனியே அனுப்புவது தகுதியல்லவென்று தானும் தன் பரிவாரங்களோடு புறப்பட்த் டான். இம்மூவரும் அந்தச் சேவகனால் கைலாகுகொடுக்கப்பட்டு இப் தேர்மேல் ஏறிக்கொண்டார்கள். உடனே தேர்ஓட ஆரம்பித்தது; ரஞ் படி யாவரும் களிப்பாய் அப்பட்டணம்விட்டுப்புறப்பட்டுக்கெ ண்டா சதூரம்போகையில் மளமளவென்று பெருஞ்சத்தமொன்று உ

யிற்று. அதைக்கேட்டு அரசன் இதென்ன ஓசை? வண்டிமுறிந்ததோவென்றுகேட்க, வண்டியின் பின்புறத்திலிருந்த சேவகன்: வண்டிமுறியவில்லை; நீங்கள் தவளையாய்ப்போன துக்கத்தால் மனம் பிளந்துபோகுமோ என்னவோவென்று உடலை இருப்புப்பட்டத்தால் இறுக்கிக் கட்டிவைத்திருந்தேன். இப்போது உங்களைக் கண்ட சந்தோஷத்தால் உடம்புபூரித்து அந்தப் பட்டம் பிளந்துபோயிற்றென்ருன். இப்படியே வழிமுழுதும் விநோதமாய் பேசிக்கொண்டு கோலாகலமாய் ராஜகுமாரன் தன் நகரம்போய்ச்சேர்ந்து தாய்தந்தையர்களைக்கண்டு அவர்களை ஆநந்தக்கடலில் ஆழ்த்தினுன். உடனே முத்தாலும் பவழத்தாலும் பட்டணமெங்கும் பந்தற்போட்டுச் சிங்காரித்து நாநாதேசத்து ராஜாக்களையும் வரவழைத்து மிகவும் சிறப்பாய் அவ்விளவரசனுக்கும் ராஜகன்னிகைக்கும் விவாக மகோற்சவம் நடத்தப்பட்டது. பிறகு அந்த ராஜகுமாரன் ஒரு குறையுமின்றி அம்மனையாளோடு மேன்மையாக வாழ்ந்துகொண்டிருந்தான்.

சமாசாரம்.

ஐரோப்பா சண்டையின் முடிவு.—ஒருவேளை ருஷியரோடு சண்டைசெய்து அவர்களைப் பலவீனப்படுத்தவேண்டியதாய் நேரிடுமென்று அங்கிலேயர் யுத்தசன்னுகங்கள் செய்வதாக முன் சொல்லியிருந்தோமே. இந்த மாதச் செய்தியைக் கேளுங்கள்: "கோட்டைகளின்மேல் பீரங்கிகளை ஏற்றினதும், வேட்டுகள் தீர்த்து வீரங்காட்டினதும், இந்தியாவிலிருந்த படைகளை மால்டாவிற்குக் கொண்டுபோனதும், மதில்களைப் பலப்படுத்தியதும், மண்மேடுபோட்டதும்" பார்லிமெண்டார் சொன்னதுபோல வீண்விரயந்தான். பீக்கன்ஸ் பில்ட் பிரபு அவர்கள் ருஷியாவை எதிர்க்கப்புறப்பட்டுக் கடைசியில் ராஜாங்கத்தார்கள் தீர்ப்பின் பிரகாரம் ருஷியாவிற்கு நயம்விளைவித்தார்; ருஷியர் துருக்கரிடத்தில் யுத்தச்செலவு வரப்பெறுகிறபரியந்தம் துருக்கியில் சில பட்டணங்களில் தண்டுகளை வைத்துக்கொண்டிருக்கவும், அதன்பிறகு சில பட்டணங்களைச் சேர்த்துக்கொள்ளவும் ஏற்பாடாகிவிட்டது. இங்கிலீஷார் இந்தியாவின் மட்டில் கவனித்திருப்பதால் ருஷியர் சூவிஸ் கால்வாயைத் தாண்டவும், யூபரிட்டீஸ் கணவாயைக் கடக்கவும் கூடாதென்று செய்த தீர்மானப்பிரகாரம் அவர்களுக்கிடந்தராதிருக்க சைப்பிரஸ்தீவைத் தங்கள் வசமாக்கிக்கொண்டார்கள். இப்பொழுது சண்டைக்குப் புறப்பட்ட படைகளையெல்லாம் இங்கிலீஷார் சைப்பிரஸ்தீவில் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டார்கள். ருஷியருக்குக் காவலாகச் சைப்பிரஸ்தீவிலிருக்கும் படைகளோடு சண்டைக்கப்பல்களையும் நிறுத்திவைத்திருக்கிருர்கள். ருஷியர் இந்தியாவை நோக்குங்காலத்தில் சைப்ரஸ் சேனைகளைவென்றுதான் வெளிதாண்டவேண்டும். இதனுலேதான் இவ்விதமான தீர்மானம் செய்துகொள்ளப்பட்டது. இதுதான் சண்டையின் முடிவு.

Printed at the C. K. S. Press.